# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 04 | JULY 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE








அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343





TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

# Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles



# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை – 625014





# Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

**அங்கத்தினர்கள் அனைவருக்கும் முக்கிய அறிவிப்பு!...**

நடப்பு நிர்வாகக்குழு இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழு நடத்தப்பட வேண்டும். கொரோனா அச்சுறுத்தல் ஊரடங்கு காரணமாக 50 நபர்களுக்கு குறைவாகவே கூட்டம் நடத்த அரசு அனுமதித்துள்ள நிலையில், ஆயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்களை கொண்ட நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் நடப்பாண்டு பொதுக்குழு கூட்டத்தில் நிர்வாகக்குழு மாற்றம் என்பது சாத்தியமற்று காணப்படுகிறது.

இது குறித்து, இந்த மாதம் (ஜுலை) செயற்குழு கூட்டம் நடத்தப்பட்டது. பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு, மிகப் பெரும்பான்மையான செயற்குழு உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில் நடப்பு நிர்வாகக்குழு அடுத்த ஒரு வருடத்திற்கு நீட்டிக்க (செப். 2022 வரை) முடிவு செய்யப்பட்டது. அதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுபற்றி வரும் பொதுக்குழு கூட்டத்தில் அங்கத்தினர்கள் தங்களின் ஒத்துழைப்பில் தொடரும் என்பதை இதழின் வாயிலாக அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

நமது சேம்பர் அனைத்து அமைப்புகளுக்கும் முன்னுதராரணமாக இயங்கி வருகிறது. இரண்டு ஆண்டு காலம் நிறைவு பெற்றவுடன் நிர்வாகக்குழு மாற்றம் எந்த ஒரு தடையுமின்றி நடைபெறுவது வழக்கம். ஆனால், உலகிற்கே அசாதாரண நிலை ஏற்பட்டுள்ள இந்த சூழல் காரணமாக நமது சேம்பர் தவிர்க்க முடியாத நிலையில் இந்த முடிவை எடுத்துள்ளது.

மேலும், கூட்டத்தில், கொரோனா ஊரடங்கும் மற்றும் அச்சுறுத்தல் குறைந்த பிறகு சிட்கான் மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நன்றி... மீண்டும் பயணிப்போம்...

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்**

**பொருள்:** பெருமையடைய விரும்புகிறவர்கள் அறிவும் ஒழுக்கமும் இல்லாத அற்பர்களுடன் சேரமாட்டார்கள். சிறுமையடைய விரும்புகிறவர்கள்தாம் அற்பர்களை உறவாகக் கொண்டாடுவார்கள்.

**அதிகாரம் 46** **சிற்றினம் சேராமை** **அரசியல்**
(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

25.06.2021 – நமது சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. **K.V. பாலா** அவர்கள், தமது B.V.K. நிறுவனம் சார்பாகவும், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாகவும், தமிழக முதல்வர் மாண்புமிகு **மு.க. ஸ்டாலின்** அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து கொரோனா நிவாரண நிதியாக ரூ. 25 லட்சத்தை அளித்தார்.

28.06.2021 – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் தமிழகத்தின் பல்வேறு தொழில் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று சிறிய அளவில் இயங்கும் ஜவுளிக்கடைகளை திறக்க அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ட்விட்டர் வாயிலாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

04.07.2021 – நமது சேம்பரின் 8வது செயற்குழு கூட்டம் காலை 11 மணி அளவில் ஜூம் காணொலி செயலி வழியாக நடைபெற்றது. இதில் சேம்பர் நிர்வாகிகள், முன்னாள் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

08.07.2021 – நமது சேம்பரின் மாதாந்திர கூட்டம் மாலை 6.30 மணி அளவில் ஜூம் காணொலி செயலி வழியாக நடைபெற்றது. **Retail and Wholesale Enterprises under the MSME Category** என்ற தலைப்பிலான இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. KR. **ஞானசம்பந்தன்,** தலைவர். லகு உத்யோக் பாரதி, மதுரை, அவர்கள் கலந்த கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

– K.K. தினேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

சிட்கான் 2021 தொழில் வர்த்தக மாநாடு, கொரோனா தொற்றின் தாக்கம் குறைந்து, அரசின் ஊரடங்கு உத்தரவு தளர்வடைந்த பிறகு நடத்தலாம் என்று செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இந்த தாக்கம் குறையும் என்று நம்புயுடன் காத்திருப்போம்...

MSME-யில் மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளும் பதிவு செய்யலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இனி மேற்படி வியாபாரிகளும் MSME-யின் உத்யம்-ல் பதிவு செய்து அடையலாம்.

மத்திய அரசு, கூட்டுறவுத் துறை எனும் புதிய இலாக்காவை துவக்கியுள்ளது. இதற்கு மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள் கூடுதல் பொறுபேற்றுள்ளார். நாட்டை ஸ்திரமான பாதையில் முன்னேற்றிச் செல்ல துவக்கியுள்ள இந்த முயற்சியை சேம்பர் வரவேற்கிறது.

சமீபத்தில் மாற்றம் செய்யப்பட்ட மத்திய அமைச்சரவைக்கு புதிய அமைச்சர்கள் குடியரசு தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டனர். இதில், தமிழகத்திலிருந்து பா.ஜ.க. மாநில தலைவர் திரு. எல். முருகன் அவர்கள் இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சேம்பர் வாழ்த்துக்களையும், மத்திய அரசுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

- B.S. ஜெனார்த்தனன்

**அனைவரும் தவறாமல்**
**தடுப்பூசியை செலுத்திக்கொள்வோம்**
**கொரோனா நோயை விரட்டுவோம்...**
**// முகக்கவசம் அவசியம் //**


**K.D. பத்மினி**
**(A to Z Arrangements)**

சத்குரு ஸரணம் சரணம்

98946 71401 63819 26819 99426 71819 90255 17366

அவ்த்த லவி பூல் தேரியோ ✳ வரவேற்பு அமைப்பாளர்

# பத்மினி ஈவன்ட்ஸ்

★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு ★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)

மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.

5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.

Prop. M.S. Divyarani

# HerboCare

Fly Leakage Free

**Herbal Sanitary Napkins**

**ஹெர்பல் சானிட்டரி நாப்கின்ஸ்**

பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற மூலிகை நாப்கினை பயன்படுத்தவும்.
சுத்தமான இயற்கை பஞ்சு, வேப்பிலை, துளசி மற்றும் கற்றாழை
மேலும் ஆறு விதமான மூலிகைகளை கொண்டு இயற்கையான முறையில் தயாரிக்கப்படுகிறது.




Customer Care : 99441 66722, 99447 95767

மாதவிடாய் குறைபாடுகளில் இருந்து குணமடைய எங்கள் ஹெர்போகேர் ஹெர்பல் சானிட்டரி நாப்கின்களை பயன்படுத்துங்கள்

L, XL, XXL அளவுகளில் கிடைக்கிறது

Mfrd. By
**Sanghath Health Care**
42, South Masi Street,
Madurai - 625001
email: herbocareproducts@gmail.com

# சமூக நிகழ்வுகள்



10.07.2021 அன்று ஸௌராஷ்ட்ர சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்**, சமூக பிரமுகர் திரு. K.K. **நாகநாதன்** மற்றும் சமூக சேவகர்கள் இணைந்து ஏழை நோயாளிகளுக்கு ஆடை தானம், மதுரை ராஜாஜி மருத்துவமனை டீன் ரத்னவேல் அவர்களிடம் ஒப்படைத்தனர். இந்த முயற்சிக்கு உதவி திரு. K.K. **நாகநாதன்** அவர்களுக்கு சேம்பர் பாராட்டுகிறது.




ஸௌராஷ்ட்ர இளைய தொழில் முனைவோர் கூட்டமைப்பான **NEXTGEN** கடந்த 19.06.2021 அன்று மாலை 6.30 மணி அளவில் ஜூம் காணொலி வழியாக **Blockchain Technology and Future of Crypto Currencies** என்ற தலைப்பிலான கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. சிறப்பு விருந்தினராக திரு. **கோடீஸ்வரன் பாபு Chief Technology Officer, Stealth Crypto Startup, Bangalore** அவர்கள் கலந்து கொண்டார்.

**NEXTGET** அமைப்பின் தலைவர் திரு. **T.M. ருபேஷ் பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். செயலாளர் திரு. **T.R. சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்தார். உறுப்பினர்கள் பலர் இந்த கூட்டத்திற்கு கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# வாழ்த்துக்கள்

## மருத்துவர்கள் தினம்

கொடுமையான இந்த கொரோனா பாதிப்பு காலத்தில் தன்னலம் கருதாத பொதுநலத்துடன் சேவை ஆற்றி வரும் நம் மருத்துவர்கள் அனைவருக்கும், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் உறுப்பினராக உள்ள மருத்துவர்கள் அனைவருக்கும் ஜூலை 1 மருத்துவர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.



## பட்டயக்கணக்காளர் தினம்



ஒவ்வொரு தொழில் நிறுவனங்களின் வழிகாட்டுதல்களுக்கு பட்டயக்காணக்காளர்களின் பங்கு அளப்பரியது. அவர்களின் மகத்தான சேவைக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக பட்டயக்கணக்காளர் தின (ஜூலை 1) வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. சேம்பர் உறுப்பினர்களாக உள்ள பட்டயக்கணக்காளர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து தங்கள் சேவையால் மேலும் தொழில் வளம் பெற வேண்டும் என்று தெரிவித்து வாழ்த்துகிறது.

# கலாச்சாரத்தின் உயிர் ஆதாரம் 'மொழி'

ஒரு சில மொழிகள் அழியும் நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டி, நமது கலாச்சார பாரம்பரியங்களின் பாதுகாப்பில் மொழிகளின் பாதுகாப்பு முக்கிய அம்சமாக விளங்குவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. எம். வெங்கையா நாயுடு அவர்கள் வலியுறுத்தியுள்ளார். எந்த ஒரு கலாச்சாரத்தின் உயிர் ஆதராமாகவும் மொழி திகழ்கிறது. மொழி கலாச்சாரத்தை வலுப்படுத்தும் வேளையில் கலாச்சாரம், சமூகத்திற்கு ஆற்றல் அளிக்கிறது, என்று அவர் கூறினார்.

இந்தியாவில் சுமார் 196 மொழிகள் தற்போது அழியும் தருவாயில் இருப்பதாகக் குறிப்பிட்டு, கவலை தெரிவித்தார். இந்த நிலையை மாற்றுவதற்கு ஒற்றுமையான நடவடிக்கையை மேற்கொள்ள, இந்தியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நமது மொழிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார். மேலும், நமது மொழிகளின் பாதுகாப்பு பற்றி பேசுகையில், ஆரம்பக் கல்வி மற்றும் இரண்டாம் நிலைக்கல்வி, தாய்மொழியில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தொழில்நுட்பக் கல்வி, படிப்படியாக, தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்களது தாய்மொழியை எண்ணி பெருமைக் கொள்ள வேண்டும். தங்களது குடும்பத்தினர், சமூகத்தினர் மற்றும் இதர நிகழ்வுகளில் தாய்மொழியிலேயே பேச வேண்டும். ஒரு மாபெரும் நாகரிகத்தின் அடித்தளமாக பன்முகத் தன்மை வாய்ந்ததாக மொழிகள் விளங்குகிறது. மொழிகள், இசை, கலை, விளையாட்டு மற்றும் பண்டிகைகளின் மூலம் நமது நாகரிக மாண்புகள் வெளிப்படுகிறது. நமது எல்லைகள் மாறலாம், ஆனால் நம் தாய் மொழியும், ஆதாரமும் என்றும் மாறாது. தாய் மொழிகளைப் பாதுகாப்பதற்கு அனைவரும் இணைந்து செயல்படுவோம் என்று கேட்டுக்கொண்டார்.

குடியரசு துணைத் தலைவர் அவர்கள் கூறியது போல, நம் ஸௌராஷ்ட்ர சமுதாய இளைய தலைமுறையினருக்கு நம் சமூகத்தின் கலாச்சாரத்தை காத்திட மொழியின் அவசியத்தை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இதனை ஒற்றுமையுடன் மேற்கொள்வது அவசியம்.

இணைவோம்... வளர்வோம்...




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633




https://youtu.be/-JMVniVMLr0

## சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவில்

# மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளும் இணையலாம்



**திரு. KR. ஞானசம்பந்தன்**
தலைவர், லகு உத்யோக் பாரதி, மதுரை

**சேம்பர் நிகழ்ச்சி**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் மாதாந்திர தொழில் வர்த்தக நிகழ்ச்சி கடந்த 08.07.2021 அன்று மாலை 6.30 மணி அளவில் ஜூம் காணொலி செயலி வழியாக நடைபெற்றது. MSME துறையில், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் தவிர, மெத்த மற்றும் சில்லரை வியாபாரிகளும் பதிவு செய்து பயனடையலாம் என்கிற அறிவிப்பை மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்டது. இது சம்பந்தமாக நமது சேம்பரில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி, **Retail and Wholesale Enterprises under the MSME Category** என்ற தலைப்பில், **திரு. KR. ஞானசம்பந்தன்**, தலைவர், லகு உத்யோக் பாரதி, மதுரை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் **திரு. குமரன் B. ஜகுவா** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கி கூட்டத்திற்கு கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் **திரு. T.R. சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். இணைச் செயலாளர் **திரு. J.S. சாயிஜீவன்** அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார்.

**திரு. KR. ஞானசம்பந்தன்** அவர்கள் தனது உரையில், முதலில், கொரோனா பெருந்தொற்று காலத்தில் தொழில் துறையினர்கள், மத்திய மாநில அரசுகளுக்கு எந்த அளவிற்கு ஆதரவுடன் இருந்து வருகிறது என்பது பற்றியும், அதே போல், அரசும், தொழில் துறையினர் நலனுக்காக பல்வேறு பயன்களை அளித்து வருவதைப் பற்றி கூட்டத்தில் தெரிவித்தார்.

பிறகு, MSME கடந்து வந்த பாதை, அதன் பெயர் மாற்றங்கள் ஆனது பற்றி மிக அழகாக, சுறுக்கமாக விவரித்தார். அதோடு, குறு, சிறு மற்றம் நடுத்தர தொழில் எனும் பிரிவை, முன்பு விற்றுமுதலின் அடிப்படையில் காணப்பட்டு வந்த நிலையில், சென்ற ஆண்டு முதல் நிறுவனத்தின் முதலீட்டின் அடிப்படையிலும் பிரித்து கணக்கிடப்படுகிறது என்று தெரிவித்தார். MSME துறை காலத்திற்கு தகுந்தாற் போல தொழில் வளர்ச்சிக்காக மாற்றம் செய்யப்பட்டு வருவதை மிக அழகாக எடுத்துரைத்தார்.

தற்போது, மத்திய அரசு MSME துறையில், மீண்டும் ஒரு புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. அதாவது, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் மட்டுமே MSME-யில் பதிவு செய்து வந்த நிலையில், தற்போது அடுத்த கட்டமாக, மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளும் MSME-யில் பதிவ செய்து பயனடையலாம் என்கிற மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

ஒரு பொருள் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, நுகர்வோரிடத்தில் சென்று சேர்க்க உதவும் சில்லரை கடைகள் வரை அனைத்தும் தொழில் தான். இன்று வரை MSME-யில் உற்பத்தி மற்றும் சேவைத் துறையினர் மட்டுமே பங்கு கொண்டு வந்த நிலையில், இனி மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளும் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. MSME-யில் இணையும் மேற்படி வியாபாரிகள், நிதி சார்ந்த தேவைகளுக்காக மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். பிற சேவைகளை பெற இயலாது என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அரசு தரும் பல்வேறு கடன்களில், 40% தொழில் வளர்ச்சிக்காக வழங்குகிறது. அதில், 18% வேளாண்மைக்கும், 14.5% ஏற்றுமதிக்கும், 7.5% MSME துறைக்கும் வழங்குகிறது. இந்த 7.5% சதவிகிதத்தில் ஏற்கனவே உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர்கள் கடன் பெற்று வரும் நிலையில், மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளையும் இணைக்கும்போது, உற்பத்தி தொழில் துறையினர்களுக்கு கடன் அளிப்பில் மாற்றம் ஏற்படும் என்கிற கருத்து நிலவுகிறது.

ஆகவே, மத்திய அரசு இதனை பரிசீலித்து 7.5% லிருந்து 15% ஆக உயர்த்த வேண்டும் என்று தொழில் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருவதாக தெரிவித்தார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினருக்காக மத்திய அரசு  பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் இருவரும் ஒன்றாக இணையாமல் பொருளை சந்தையில் சேர்க்க முடியாது. இருவரும் பரஸ்பரம் இணைந்து செயல்படுதலே தொழில் ஆரோக்கியம் மேம்படும் என்று மிக அழகாக கூறி தனது உரையை நிறைவு செய்தார். கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்களின் சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் **திரு. K.K. தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
**மகாத்மா முதியோர் இல்லம்**
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
**ஒருநாள் நீங்களும் உதவலாமே**
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
18 ஆம் ஆண்டு சேவை
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd

Dealers in



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# CENTRE GRANTS FURTHER EXTENSION DUE TO COVID

**Notification No. 74/2021 & 75/2021 dtd. 25.06.2021 - Circular No. 12/2021 dtd/ 25.06.2021**

**Objections te Dispute Resolution Panel (DRP) and Assessing Officer** under **section 144C of the Income-tax Act, 1961** (hereinafter referred to as "the Act") for which the last date of filing under that section is 1st June, 2021 or thereafter, may be filed within the time provided in that section or by **31st August, 2021**, whichever is later.

**The Statement of Deduction of Tax** for the last quarter of the Financial Year 2020-21, required to be furnished on or before 31" May, 2021 under Rule 31A of the Income-tax Rules,1962 (hereinafter referred to as "the Rules"), as extended to 30th June, 2021 vide Circular No.9 of 2021, may be furnished **on or before 15th July, 2021.**

**The Certificate of Tax Deducted at Source in Form No.16,** required to be furnished to the employee by 15th June, 2021 under Rule 31 of the Rules, as extended to 15th July, 2021 vide Circular No.9 of 2021, may be furnished **on or before 31th July, 2021.**

**The Statement of Income paid or credited** by an investment fund to its unit holder in Form No. 64D for the Previous Year 2020-21, required to be furnished on or before 15th June, 2021 under Rule 12CB ofthe Rules, as extended to 30th June, 2021 vide Circular No.9 of 2021, may be furnished **on or before 15th July, 2021.**

**The Statement of Income paid or credited** by an investment fund to its unit holder in **Form No. 64C** for the Previous Year 2020-21, required to be furnished on or before 30th June, 2021 under Rule 12CB of the Rules, as extended to 15th July, 2021 vide Circular No.9 of 2021, may be furnished **on or before 31st July, 2021.**

The application **under Section 10(23C), 12AB, 35(1)(ii)/(iia)/(iii) and 80G** of the Act in Form No. 10A / Form No.10AB, lor registration/ provisional registration/intimation/ approval/ provisional approval **of Trusts/ Institutions/ Research Associations etc.,** required to be made on or before 30th June, 2021, may be made **on or before 31st August, 2021.**

The **compliances** to be made by the taxpayers such as investment, deposit, payment, acquisition, purchase, construction or such other action, by whatever name called, for the purpose of **claiming any exemption under the provisions contained in Section 54 to 54GB** of the Act, for which the last date of such compliance falls between 1st April, 2021 to 29th September, 2021 (both days inclusive), may be completed **on or before 30th September, 2021.**

**The Quarterly Statement in Form No. 15CC** to be furnished by authorized dealer in respect of remittances made for the quarter ending on 30th June, 2021, required to be furnished on or before 15th July, 2021 under Rule 37 BB of the Rules, may be furnished **on or before 31st July. 2021.**

**The Equalization Levy Statement in Form No. 1** for the **Financial Year 2020-21**, which is required to be filed on or before 30th June, 2021, may be furnished **on or before 31st July, 2021.**

The Annual Statement required to be furnished under **sub-section (5) of section 9A of the Act by the eligible investment fund in Form No. 3CEK** for the Financial Year 2020-21, which is required to be filed on or before 29th June, 2021, may be furnished **on or before 31st July, 2021.**

**Uploading of the declarations** reoeived from recipients in **Form No. 15G/15H during the quarter ending 30th June, 2021,** which is required to be uploaded on or before 15th July, 2021, may be uploaded by **31st August,2021.**

**Exercising of option** to withdraw pending application (filed before the erstwhile Income Tax Settlement Commission) under **sub-section (1) of Section 245M** of the Act in **Form No. 34BB,** which is required to be exercised on or before 27th June, 2021, may be exercised **on or before 31st July, 2021.**

**Last date of linkage of Aadhaar with PAN under section 139AA of the Act,** which was earlier extended to 30"' June, 2021 is further extended to **30th September, 2021.**

**Last date of payment of amount under Vivad se Vishwas(without additional amount)** which was earlier extended to 30th June, 2021 is further **extended to 31st August, 2021**

**Last date of payment of amount under Vivad se Vishwas (with additional amount)** has been notified as **31st October, 2021.**

**Time Limit tor passing assessment order** which was earlier extended to 30thJune, 2021 is further **extended to 30th September, 2021.**

**Time Limit for passing penalty order** which was earlier extended to 30th June,2021 is further **extended to 30th September, 2021.**

**Time Limit for processing Equalisation Levy returns** which was earlier extended to 30th June, 2021 is further **extended to 30th September, 2021.**


ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்

ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்
98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# Ministry of Finance - Exchange Rate Notification No.57/2021 - Customs (N.T.)

In exercise of the powers conferred by section 14 of the Customs Act, 1962 (52 of 1962), and in supersession of the Notification No.54/2021-Customs(N.T.), dated 17th June, 2021 except as respects things done or omitted to be done before such supersession, the Central Board of Indirect Taxes and Customs hereby determines that the rate of exchange of conversion of each of the foreign currencies specified in column (2) of each of Schedule I and Schedule II annexed hereto, into Indian currency or vice versa, shall, with effect from 2nd July, 2021, be the rate mentioned against it in the corresponding entry in column (3) thereof, for the purpose of the said section, relating to imported and export goods.- 01 JUL 2021 4:15PM by PIB Delhi

**SCHEDULE-I**

| Sl.No. | Foreign Currency | Rate of exchange of one unit of foreign currency equivalent to Indian rupees | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | (a) | (b) |
| | | (For Imported Goods) | (For Exported Goods) |
| 1. | Australian Dollar | 57.00 | 54.65 |
| 2. | Bahraini Dinar | 203.85 | 191.35 |
| 3. | Canadian Dollar | 61.20 | 59.00 |
| 4. | Chinese Yuan | 11.70 | 11.35 |
| 5. | Danish Kroner | 12.10 | 11.65 |
| 6. | EURO | 89.80 | 86.65 |
| 7. | Hong Kong Dollar | 9.75 | 9.40 |
| 8. | Kuwaiti Dinar | 255.80 | 239.45 |
| 9. | New Zealand Dollar | 53.40 | 51.05 |
| 10. | Norwegian Kroner | 8.80 | 8.50 |
| 11. | Pound Sterling | 104.65 | 101.15 |
| 12. | Qatari Riyal | 20.80 | 19.45 |
| 13. | Saudi Arabian Riyal | 20.50 | 19.25 |
| 14. | Singapore Dollar | 56.30 | 54.35 |
| 15. | South African Rand | 5.40 | 5.05 |
| 16. | Swedish Kroner | 8.85 | 8.55 |
| 17. | Swiss Franc | 82.05 | 78.85 |
| 18. | Turkish Lira | 8.80 | 8.30 |
| 19. | UAE Dirham | 20.90 | 19.65 |
| 20. | US Dollar | 75.30 | 73.60 |

**SCHEDULE-II**

| Sl.No. | Foreign Currency | Rate of exchange of 100 units of foreign currency equivalent to Indian rupees | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | (a) | (b) |
| | | (For Imported Goods) | (For Export Goods) |
| 1. | Japanese Yen | 68.25 | 65.80 |
| 2. | Korean Won | 6.80 | 6.35 |

# NEW CHANGES IN TDS & TCS

Effect from **01.07.2021**

Section 194Q has been inserted on Purchase of Goods by the Buyer @ 0.1% of the sum exceeding Rs. 50 Lacs. - **ILLUSTRATION**


| Turnover of Seller (in Crore) | Turnover of Buyer (in Crore) | Amt. recd. or paid for sale or purchase of Goods in previous year (in lakhs) | Taxable amount | Whether PAN is available | TDS or TCS | Liable Person | Applicable Section | Excluded Section | Explanation |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 9 | 55 | 5 | Buyers PAN available | TCS @0.1% | Seller | 206C(1H) | 194Q | Buyer Turnover less than 10Cr. |
| 11 | 9 | 55 | 5 | Buyers PAN not available | TCS @5% | Seller | 206C(1H) | 194Q | Buyer Turnover less than 10Cr. |
| 9 | 11 | 55 | 5 | Sellers PAN available | TDS @0.1% | Buyer | 194Q | 206C(1H) | Sellers Turnover less than 10Cr. |
| 9 | 11 | 55 | 5 | Sellers PAN not available | TDS @5% | Buyer | 194Q and 206AA | 206C(1H) | Sellers Turnover less than 10Cr. and PAN not available |
| 11 | 11 | 55 | 5 | Sellers PAN available | TDS @0.1% | Buyer | 194Q | 206C(1H) | Exclusion Provided under Sec. 206C(1H) |
| 11 | 11 | 55 | 5 | Sellers PAN not available | TDS @5% | Buyer | 194Q and 206AA | 206C(1H) | Exclusion Provided under Sec. 206C(1H) |

TDS u/s 194Q overrides TCS u/s 206C(1H), i.e. in case where both TDS under 194Q and TCS under section 206(1H) is applicable, then only TDS on Purchase of Goods u/s 194Q shall be detuctible. If Buyer fails to deduct TDS us 194Q; then 30% of such sum will be disallowable u/s. 40(a)(ia)

## முத்திரைத்தாள் பதிவு காலம் நீட்டிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் பயன்பெறலாம்

**G.O. (Ms.) No.80 - Dtd. 31.05.2021**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வங்கி மற்றும் நிதி நிறுனங்களிடமிருந்து கடன் உதவி பெறும்போது செலுத்த வேண்டிய **MOD** முத்திரைத்தாள் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து 31.03.2021 வரை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது டிசம்பர் 2021 வரை நீட்டிக்கப்படுகிறது.



ABSTRACT

Registration Department – Micro, Small and Medium Enterprises Sector – Loans and additional loans granted by Banks and Financial Institutions – Announcement made by the Hon'ble Chief Minister on 11.05.2021 – Extension of full exemption from payment of Stamp Duty under the Aathma Nirbhar Bharat Scheme upto 31.12.2021 – Orders – Issued – Amendment – Notified.

COMMERCIAL TAXES AND REGISTRATION (J1) DEPARTMENT

G.O. (Ms.) No.80 — Dated : 31.05.2021


Read :

1. : G.O.(Ms)No.165, Commercial Taxes and Registration (J1) Department, dated 5.11.2020.
2. : From the National Credit Guarantee Trustee Company Limited, Ministry of Finance, Government of India, Ref.No.0007/NCGTC /ECLGS, dated 01.4.2021.
3. : Hon'ble Chief Minister's Press Release No.036, dated 11.5.2021.

*******

ORDER:

In the Government order first read above, orders were issued granting exemption from payment of Stamp duty in respect of Agreement relating to Deposit of Title Deeds executed for securing loans availed from Banks and Financial Institutions by Micro, Small and Medium Enterprises under Aatma Nirbhar Bharat Scheme for the period upto 31.3.2021 and also reduction of the Registration fee at 0.1% from 1.0% in respect of registration of Agreement relating to Deposit of Title Deeds on loans and additional loans granted by the Banks and Financial Institutions to Micro, Small and Medium Enterprises.



2. In the reference second read above, the Government of India has extended the Aatma Nirbhar Bharat Scheme for a further period of 6 months upto 30.09.2021.

3. In the meantime, in the reference third read above, the Hon'ble Chief Minister has announced among others on 11.5.2021 as follows:-

xxx xxx xxx

xxx xxx xxx

4. Based on the above announcement made by the Hon'ble Chief Minister, Government have decided to extend for granting exemption from payment of Stamp Duty in respect of registration of Agreement relating to Deposit of Title Deeds executed for securing loans availed from Banks and Financial Institutions by Micro, Small and Medium Enterprises under Aatma Nirbhar Bharat Scheme as ordered in the Government order first read above, for the period upto 31.12.2021.

5. The Government accordingly direct that the notification appended to this order will be published in the next issue of the Tamil Nadu Government Gazette. The Works Manager, Government Central Press is requested to send five copies of the gazette in which the notifications are published to the Government.

(BY ORDER OF THE GOVERNOR)

M.A. SIDDIQUE
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT (F

To
The Inspector General of Registration, Chennai-600 028.
The Works Manager, Government Central Press, Chennai-600 079
(By Special Messenger)
The Accountant General (A&E), Chennai-600 018.

Copy to:
The Office of the Hon'ble Chief Minister, Chennai-9.
The Special Personal Assistant to the Minister
(Commercial Taxes and Registration), Chennai-9.
✓The Micro, Small and Medium Enterprises Department, Chennai-9.


UIN No. Applied — MFG. No. 8/25 D

பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க

PLASMODIN CAPSULES 500 mg.
Increase Immunity Power



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be



## அசாதாரண சூழலில்

# நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் வழிகள்

வாழ்க்கையின் கணிக்க முடியாத தன்மை தற்போதைய காலங்களில் இருப்பதை விட ஒருபோதும் சொல்லப்பட்டதில்லை. கொரோனா தொற்றுநோய் பரவல் வாழ்க்கையின் யதார்த்தங்களை முன்னால் கொண்டு வந்துள்ளது. அவசர நிதியைப் பராமரிப்பதில் இருந்து, நீண்ட கால இலக்குகளுக்கு நிதி ஒதுக்குவது, போதுமான இடர் பாதுகாப்புக்காக ஒருவரை பரிந்துரைப்பது, போன்றவற்றின் மூலம் தொற்று சூழ்நிலைகளுக்கு நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நிதி ரீதியாக பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். சில முக்கிய நிதி அம்சங்களையும் அவை எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்பதையும் பார்ப்போம்.

**அவசர நிதி:** உங்கள் அவசர நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, நீங்கள் சில நிதிகளைத் தனியாக வைத்திருக்க வேண்டும். மருத்துவ அவசரநிலை அல்லது வேலை இழப்பு ஏற்பட்டால், இருக்கும் முதலீடுகளை செலவிடுவது தவிர்க்கப்பட வேண்டும். எனவே, குறைந்தது ஆறு மாத வீட்டு செலவுகளுக்கு அவசர நிதியை வைத்திருப்பது நல்லது. இத்தகைய நிதிகள் குறுகிய கால கடன் நிதிகள் அல்லது வரிவிதிப்பு வருமானம் மற்றும் எளிதான பணப்புழக்கத்திற்காக ரொக்கமாக பயன்படுத்தப்படலாம்.

**போதுமான சுகாதார பாதுகாப்பு:** போதுமான சுகாதார காப்பீடு இருப்பது ஆபத்துக்களை நிர்வகிப்பதற்கான முதல் படியாகும். மருத்துவ பணவீக்கம் எப்போதுமே வழக்கமான பணவீக்கத்தை விட அதிகமாக உள்ளது மற்றும் கொரோனா வைரஸ் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கான செலவு அதை மேலும் உயர்த்தியுள்ளது. சிக்கலான நோய் திட்டங்களுடன் தனிப்பட்ட சுகாதார அட்டைகள் அல்லது மொத்த குடும்பத்திற்கான காப்பீட்டு திட்டங்களை வாங்குவது மிகவும் அவசியம். உங்களிடம் ஏற்கனவே சுகாதார பாதுகாப்பு இருந்தால், டாப்-அப் அல்லது சூப்பர் டாப்-அப் திட்டத்தை தேர்ந்தெடுப்பதன் மூலம் பாதுகாப்பை அதிகரிக்கும்.

**போதுமான ஆயுள் கவர்:** சுகாதார பாதுகாப்புடன், போதுமான ஆயுள் காப்பீட்டுத் தொகையைப் பெறுங்கள். இதில் டேர்ம் காப்பீட்டுத் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுங்கள். டேர்ம் காப்பீட்டு திட்டம் என்பது குறைந்த விலை, அதிக கவர் திட்டம் மற்றும் குடும்பத்திற்கான நிதி பாதுகாப்பை உறுதி செய்கிறது. டேர்ம் காப்பீட்டு திட்டத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக விபத்து நன்மை, சிக்கலான நோய் போன்ற கூடுதல் அம்சங்களை சேர்த்தும் ஒருவர் தேர்வு செய்யலாம்.

**நீண்ட கால இலக்குகளுக்காக முதலீடு:** நீண்ட கால இலக்குகளுக்காக சேமிப்பதற்கான சிறந்த வழி, வருமானத்தின் ஒரு பகுதியை செலவு செய்வதற்கு முன்பு முதலீடு செய்தவாகும். ஈக்விட்டி, மியூச்சுவல் ஃபண்டுகள் போன்ற ஈக்விட்டி சார்ந்த முதலீடுகள் என்றாலும், உங்கள் இலக்குகளை அடையாளம் கண்டு, அவற்றை நோக்கி நிதிகளை ஒதுக்குங்கள். சிறந்த வழி என்னவென்றால், SIP-கள் மூலம் தொடர்ந்து முதலீடு செய்து அவற்றை உங்கள் நீண்ட கால இலக்குகளுடன் இணைக்கவும்.

**முதலீட்டு பதிவுகள்:** உங்கள் முதலீடுகளின் சரியான பதிவைப் பராமரிப்பது உங்கள் முதலீட்டு பயணத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அணுகக்கூடிய இடத்தில் சேமிக்கப்பட்டுள்ள மியூச்சுவல் ஃபண்ட் முதலீகள் தொடர்பான காப்பீட்டுக் கொள்கை ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் உங்களிடம் உள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வங்கி விவரங்களுடன், உங்கள் குடும்ப உறுப்பினர்கள் உங்கள் முதலீடுகள் மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். இதனால் கடைசி நிமிட நெருக்கடியை தவிர்க்கலாம்.


**பரிந்துரைகள்:** கடைசியாக, உங்கள் முதலீடுகள் மற்றும் காப்பீட்டுத் திட்டங்களில் சரியான பரிந்துரைகள் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, முதலீடு மற்றும் காப்பீட்டுத் திட்டங்களின் நோக்கம் உங்கள் குடும்பத்தின் நன்மை தான். பரிந்துரையாளர் இல்லாத நிலையில், வருமானத்தில் குடும்ப உறுப்பினர்கள் உரிமை கோருவது கடினம். மேலும், பரிந்துரைகளைச் செய்த பிறகும், உங்கள் சொத்துக்களை உங்கள் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு சுமூகமாக மாற்றுவதற்கான விருப்பத்தை நீங்கள் உருவாக்கலாம். **– தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (த)**

## திட்டங்களும் வட்டி விகிதங்களும்

இந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் நிலவிய அதே வட்டி விகிதம் செப்டம்பர் மாதம் 30ம் தேதி 2021 வரை தொடரும் என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திட்டங்களும் அதன் வட்டி விபரங்களை காணலாம்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் வட்டி விகிதம் |
|---|---|---|
| 1 | பி.பி.எஃப் | 7.1% |
| 2 | கிஷான் விகாஸ் பத்ரா | 6.9% |
| 3 | தேசிய சேமிப்பு சான்றிதழ் | 6.8% |
| 4 | சுகன்யா சம்ரிதி திட்டம் | 7.6% |
| 5 | மூத்த குடிமகன் சேமிப்பு திட்டம் | 7.4% |
| 6 | மாதாந்திர வருமான கணக்கு | 6.6% |
| 7 | சேமிப்பு கணக்கு | 4% |

*இந்த நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் சேமிப்பு கணக்குகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வட்டி விகிதங்கள்.




# தொழில்துறை அனுமதிக்கு ஒற்றைச் சாளர முறை - விரைவில்

தொழில்துறை அனுமதிக்கான ஒற்றைச் சாளர முறையை மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆய்வு செய்தார். இந்த கூட்டத்தில் வர்த்தக மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு. சோம் பிரகாஷ் கலந்து கொண்டார். இந்த கூட்டத்திற்குப்பின் திரு. பியூஷ் கோயல் அவர்கள் கூறியதாவது;

தேசிய ஒற்றைச் சாளர முறையின் முதல் கட்டம் விரைவில் தொடங்கப்படும். இந்த டிஜிட்டல் தளம் முதலீட்டாளர்கள், தொழில் தொடங்குவதற்கு தேவையான பல வகையான முன் அனுமதிகளை பெற அனுமதிக்கும்.

முதல் கட்டமாக, 17 அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் 14 மாநிலங்கள் இடம் பெறும் டிஜிட்டல் தளம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. தொழில் தொடங்க நிலம் வாங்குவது முதல் அனைத்து தகவல்களும் இந்த டிஜிட்டல் தளத்தில் இருக்கும். இந்த ஒற்றை சாளர முறை, உண்மையானதாகவும், அனைத்து பிரச்னைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணக்கூடியதாகவும் இருக்கும்.

முதலீட்டுக்கு முந்தைய ஆலோசனை, நிலம் உள்ள இடங்கள், மத்திய மற்றும் மாநில அளவிலான அனுமதி ஆகியவை இதில் இடம்பெறும்.

ஒரு குறிப்பிட்ட தொழில் தொடங்குவதற்கு தேவையான அனுமதிகளை முதலீட்டாளர்கள் அறிந்து கொள்ளவும், அதற்கு விண்ணப்பிக்கவும், அதன் நிலவரத்தை அறிந்து கொள்ளவும், தேவையான விளக்கங்களை பெறவும் இந்த டிஜிட்டல் தளம் உதவும். இவ்வாறு திரு. பியூஷ் கோயல் கூறினார். **- PIB News**

# தொழில் துவங்க நினைக்கும் பெண்களுக்கான நிதி ஆலோசனை

**பொருளாதார திட்டம்:** தொழிலுக்காக செய்யக்கூடிய செலவுளையும், வீட்டுச் செலவுகளையும் கண்காணிக்க வேண்டும். நீங்கள் பணத்தை சேமிக்கக்கூடிய பகுதிகளில் கவனம் செலுத்துங்கள். மேலும், செலவினங்களையும் கண்காணிக்க வேண்டும். அதற்காக நீங்கள் ஒரு பண நாட்குறிப்பைப் பயன்படுத்தலாம். கிரெடிட் கார்டுகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டம்.

**வணிக கடன்:** சரியான நேரத்தில் பில்களை செலுத்த வேண்டும். நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். மேலும், வணிகத்திற்கான பாதுகாப்பற்ற கடன்களைத் தவிர்ப்பதற்கும், கிரெடிட் கார்டுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கும் உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. வணிக கடனுக்கு நல்ல கடன் மதிப்பெண் முக்கியம். வங்கிகள் மற்றும் என்.பி.எஃப்.சி. வங்கிகளால் வழங்கப்படும் வணிக கடன்களில் பெண்களுக்கு பல சிறப்பு வணிக கடன் திட்டங்கள் உள்ளன.

**அவசர நிதி:** திடீர் மற்றும் அவசர பயன்பாட்டிற்கு என தனியாக அவசர நிதியை பராமரிப்பது முக்கியம்.

**ஓய்வூதிய திட்டமிடல்:** இந்த சேமிப்பை எந்த சூழ்நிலையிலும் வணிகத்தில் முதலீடு செய்ய வேண்டாம். ஓய்வூதியம் மற்றும் பிற நிதி இலக்குகளுக்காகவும் முதலீடு செய்யுங்கள். வணிகம் மற்றும் தனிப்பட்ட செலவுகளை தனித்தனியாக வைத்திருங்கள், ஒரு போதும் கலக்காதீர்கள். இரண்டிற்கும் தனித்தனி வங்கிக் கணக்குகளை வைத்திருப்பது சிறந்தது.

**முதலீடு:** நீங்கள் வணிகத்திலிருந்து நல்ல லாபம் ஈட்டினால், அதை வங்கிக் கணக்கில் வைப்பதற்கு பதிலாக பணத்தை திரவ நிதிகளில் முதலீடு செய்யலாம். முதலீட்டிலிருந்து கிடைக்கும் கூடுதல் வருமானங்கள் பிற தேவைகளுக்கு பயன்படுத்தலாம். அபாயங்களைக் குறைக்க, உங்கள் போர்ட்ஃபோலியோவில் பன்முகத்தன்மையைப் பேணுவது மிக முக்கியம். எனவே பங்குகள், பரஸ்பர நிதிகள், பிபிஎஃப் போன்றவற்றில் முதலீடு செய்ய முயற்சிக்கவும். மேலும் செலவு மற்றும் முதலீடு தொடர்பான சிறந்த செயல்பாடு மற்றும் வழிகாட்டுதலுக்காக நிதித் திட்டமிடுபவர்களிடமிருந்து ஆலோசனையைப் பெறலாம். **– தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (த)**


சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதிஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223



## முதல்வர் நிதிக்கு
## சேம்பர் முதுநிலை தலைவர் வழங்கிய
## கொரோனா நிவாரண நிதி

நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் முதுநிலைத் தலை
திரு. **K.V. பாலா** அவர்கள், கடந்த ஜூன் மாதம் 26ம் தேதி அ
தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்க
தலைமைச் செயலகத்தில் சந்தித்து கொரோனா நிவாரண
பணிகளுக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதக்கு
**25,00,000/–** காசோலையாக வழங்கினார்.

அவர் அளித்த கடிதத்தில், கடந்த சட்ட மன்ற தேர்தலி
ஆகப்பெரும் வெற்றியை அடைந்து, நம் தாய்த் தமிழகத்தின் முதல்வ
தாங்கள் அரியணை ஏறியமை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோ
வாழ்த்தி வணங்குகிறோம். தங்கள் சீர்மிகு தலைமையிலே தமி
தொழில் துறையிலும், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டிலும் தன்னிகரில
வளர்ச்சி கண்டு, தரணியிலே தலைநிமிரும் என்பதில் எங்கள
எள்ளளவும் ஐயமில்லை.

ஐரோப்பிய ஒன்றிய இந்தியன் சேம்பர்ஸ், பன்னாட்டு ம
உரிமைகள் பாதுகாப்பு குழுமம், சௌராஷ்ட்ர வணிக மேம்பாட்டு குழு
**(ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்)**, **BVK** தொழில் குழு
மற்றும் எங்களது மரபு சாரா எரிசக்தி, விவசாயம், நிதித்துறை முதலீ
நிறுவனங்களில், தமிழகம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிக
பணிபுரியும் எங்கள் தொழிலாளர்கள் சார்பில், தங்களின் அனை
முனைவுகளிலும் / முயற்சிகளிலும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

ஒரு தொழில் முனைவோனாக, கோவிட்–19 பெருந்தொற்றினால்
நாட்டு மக்கள், குறிப்பாக நம் தமிழக மக்கள், அடைகின்ற துயர்குறி
தாங்கள் அடைகின்ற வருத்தங்களையும், சோகங்களை
பகிர்ந்துகொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தங்கள் சீ
தலைமையின் கீழ் தாங்கள் திறம்பட நடத்திச் செல்லும் தமிழக
எடுக்கும் முனைப்புகளும், முயற்சிகளும் இந்த கோவிட்
பெருந்தொற்று என்னும் காரிருளை கிழித்துக்கொண்டு கிளம்
ஒளிக்கதிராக எங்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றனது.

இந்த சோதனைமிகு வேளைதனிலே, எங்கள் ஒத்துழைப்பி
தங்கட்கு நல்கும் வகையில், அரசு–முதல்வர் பொது நிவாரண நிதி
எங்களின் பங்களிப்பாக ரூ. 25,00,000/– வழங்குகிறோம் என்று த
கடிதத்தில் கூறியுள்ளார்.



துநிலைத் தலைவர் திரு. K.V. பாலா அவர்கள்
உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சந்திப்பு
. கே.கே. கோவிந்த்



சேம்பர் முதுநிலைத் தலைவர்
திரு. K.V. பாலா அவர்கள்
சபா நாயகர் திரு. அப்பாவு
அவர்களை சந்தித்தார்.

**ன குரல்**

### தி நிறுவனம் முதலமைச்சரின் வாரண நிதிக்கு 25 லட்சம் ன காசோலையை வழங்கியது

தலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை தலைமைச்செயலகத்தில் இண்டஸ் நிதி லைவர் கே.வி.பாலா கொரோனா நிவாரணப் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு க்கான காசோலையை வழங்கினார் உடன் ணைத் தலைவர் கே.கே கோவிந்த மூர்த்தி, ளர் வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.
கள் அளித்த அறிக்கையில் கூறியதாவது :
ல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த சட்ட மன்ற கப்பெரும் வெற்றியை அடைந்து, நம் தின் முதல்வராக தாங்கள் அரியணை மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். வாழ்த்தி
கு தலைமையிலே தமிழகம் தொழில் ச்சாரம் மற்றும் பண்பாட்டிலும் தன்னிகரிலா , தரணியிலே தலைநிமிரும் என்பதில் ளவும் ஐயமில்லை.
சேம்பர்ஸ், பன்னாட்டு மனித உரிமைகள் மம், சௌராஷ்ட்ரா வணிக மேம்பாட்டு தாழில் குழுமம் மற்றும் எங்களது மரபு சாரா பம், நிதித்துறை முதலீட்டு நிறுவனங்களில், ம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கள் தொழிலாளர்கள் சார்பில், தாங்கள் த்து முனைவுகளிலும், முயற்சிகளிலும் ழ்த்துகிறோம். தாங்கள் அமைத்துத்தரும் லே நாங்கள் தங்களுடன் பயணிப்போம் றுதிபட தெரிவித்து கொள்கிறோம்.
ல் முனைவோனாக, கோவிட் - 19 ால், நம் நாட்டு மக்கள், குறிப்பாக நம் தமிழக ன்ற துயர்குறித்து தாங்கள் அடைகின்ற ம், சோகங்களையும் பகிர்ந்துகொள்ள நான் கிறேன்.
கு தலைமையின் கீழ் தாங்கள் திறம்பட ம் தமிழக அரசு எடுக்கும் முனைப்புகளும், ந்த கோவிட் - 19 பெருந்தொற்று என்னும் த்துக்கொண்டு கிளம்பிய ஒளிக்கதிராக க்கை ஊட்டுகின்றது. தங்களின் கருணை லின் கீழ், ஒன்றிணைந்து நாம் இந்த னையினை வென்று வாகை சூடுவோம் துமில்லை.
தனைமிகு வேளைதனிலே, எங்கள் தங்கட்கு நல்கும் முகத்தான் தமிழ்நாடு ர் பொது நிவாரண நிதிக்கு எங்களின் ாய் இருபத்தைந்து இலட்சத்திற்கான (ரூ. ாசோலையை இந்த மடலுடன் இணைத்து



### கொரோனா நிவாரண நிதி

தமிழ்நாடு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலகத்தில் பி.வி.கே. தொழில் குழுமத்தின் தலைவர் கே.வி.பாலா சந்தித்து கொரோனா நிவாரண பணி களுக்காக முதல்–அமைச்சரின் பொது நிவாரணநிதிக்கு 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். நிகழ்ச்சியில் நிறுவனத்தின் துணைத்தலைவர் கே.கே. கோவிந்தமூர்த்தி, முதுநிலை மேலாளர் வெங்கடேசன் ஆகி யோர் பங்கேற்றனர். மேலும் அவர்கள் அளித்த அறிக்கை யில், 'கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தமிழக அரசு எடுக்கும் முயற்சிகள் எங்க ளுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது' என்று தெரிவித்தனர்.

# Contribution for a cause



| NT BUREAU |
Chennai, July 7:

A sum of Rs 25 lakh was donated to Chief Minister MK Stalin towards CM Relief Fund by K V Bala, Human Rights Councillor-IHRDC (International Human Rights Defence Committee) an UN affiliate body, Governing Council Member - EU India Chambers.

Bala is also senior president, Sourashtra Chamber of Commerce and chairman of BVK Group of companies.

He said that he contributed towards the relief to help the State fight Covid-19.

Sourashtra Chamber of Commerce located at East Veli Street, Madurai, can be reached at 0452262955.



**K V Bala**
Founder - Indus Finance Ltd
EU India Chamber - Governing Council Member
IHRDC, an UN affiliate Body - Human Rights Councellor
Sourashtra Chamber of Commerce - Sr President

25/06/2021
பெறுநர்


திருமிகு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழக முதல்வர்
செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை - 600 001

மாண்பும் மரியாதையும் மிகு ஐயா,

கடந்த சட்ட மன்ற தேர்தலிலே, ஆகப்பெரும் வெற்றியை அடைந்து, நம் தாய்த் தமிழகத்தின் முதல்வராக தாங்கள் அரியணை ஏறியமை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். வாழ்த்தி வணங்குகிறோம்.

தங்கள் சீர்மிகு தலைமையிலே தமிழகம் தொழில் துறையிலும், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டிலும் தன்னிகரிலா வளர்ச்சி கண்டு, தரணியிலே தலைநிமிரும் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

ஐரோப்பிய ஒன்றிய இந்தியன் சேம்பர்ஸ், பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்பு குழுமம், சௌராஷ்ட்ரா வணிக மேம்பாட்டு குழுமம், BVK தொழில் குழுமம் மற்றும் எங்களது மரபு சாரா எரிசக்தி, விவசாயம், நிதித்துறை முதலீட்டு நிறுவனங்களில், தமிழகம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் எங்கள் தொழிலாளர்கள் சார்பில், தாங்கள் தங்கள் அனைத்து முனைவுகளிலும், முயற்சிகளிலும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



இந்த சோதனைமிகு வேளைதனிலே, எங்கள் ஒத்து... தங்கட்கு நல்கும் முகத்தான் தமிழ்நாடு அரசு - முத... நிவாரண நிதிக்கு எங்களின் பங்களிப்பாக ரூபாய் இ... இலட்சத்திற்கான (ரூ. 25,00,000 /- ) காசோலையை ... மடலுடன் இணைத்து தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்... தமிழகத்தின் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்... தங்களுடன் இணைந்து பணியாற்ற விழையும்,

தங்கள் உண்மையுள்ள
பாலா குட்டி

## நிவாரண நிதி வழங்கல்

**மதுரை, ஜூன் 26 –**
மதுரை சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்க முதுநிலை தலைவர் பாலா கொரோனா தடுப்பு நடவ டிக்கைகளுக்காக பொது நிவாரண நிதிக்கு ரூ.25 லட் சம் காசோலையை தமிழக அரசுக்கு வழங்கியுள்ளார்.

நாளிதழ்க

LAABH SAMAC
- JULY

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



# மத்திய அரசு துறைகளில் – புதிய அமைச்சர்கள் பொறுப்பேற்பு

மத்திய அரசின் 30 அமைச்சரவைத் துறைகளில் கீழ் காணும் 15 துறைகளில் புதிய அமைச்சர்களை நமது பாரதப்பிரதமர் அவர்களின் அறிவுரையின் படி, குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். அவர்களின் பெயர் மற்றும் துறை விபரங்களை பட்டியலிடப்பட்டுள்ளதை காணலாம்.

| வ. எண் | புதிய அமைச்சர்கள் பெயர் | அமைச்சரவைப் பதவி |
|---|---|---|
| 1 | திரு. நாரயாண் தாட்டு ராணே | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் |
| 2 | திரு. சர்பானந்த சோனோவால் | துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சர் மற்றும் ஆயுஷ் அமைச்சர் |
| 3 | டாக்டர். வீரேந்திர குமார் | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் |
| 4 | திரு. ஜோதிராதித்ய எம் சிந்தியா | சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் |
| 5 | திரு. ராம்சந்திர பிரசாத் சிங் | எஃகு அமைச்சர் |
| 6 | திருமதி. அஷ்வினி வைஷ்ணவ் | ரயில்வே அமைச்சர், தொலைத்தொடர்பு அமைச்சர் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் |
| 7 | திரு. பசுபதி குமார் பராஸ் | உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் |
| 8 | திரு. கிரண் ரிஜிஜ் | சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் |
| 9 | திரு. ராஜ் குமார் சிங் | எரிசக்தி, புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் |
| 10 | திரு. ஹர்தீப் சிங் புரி | பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர், வீடு & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் |
| 11 | திரு. மன்சுக் மண்டாவியா | சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சர், ரசாயணம் மற்றும் உரங்கள் அமைச்சர் |
| 12 | திரு. புபேந்தர் யாதவ் | சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் |
| 13 | திரு. பர்ஷோத்தம் ருபாலா | மீன்வளம், கால்நடை மற்றும் பால் வள அமைச்சர் |
| 14 | திரு. ஜி கிஷன் ரெட்டி | கலாச்சார / சுற்றுலா அமைச்சர், வடகிழக்கு மாகாண வளர்ச்சி அமைச்சர் |
| 15 | திரு. அனுராக் சிங் தாக்கூர் | தகவல் & ஒலிபரப்பு அமைச்சர், இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சர் |

மேற்படி 15 புதிய அமைச்சர்களைத் தவிர, 45 இணை அமைச்சர்கள் (மாநில) வெவ்வேறு துறைகளில் குடியரசுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில், தமிழகத்தைச் சேர்ந்த பா.ஜ.க மாநில தலைவர் திரு. **எல். முருகன்** அவர்களுக்கு **மீன் வளம், கால்நடை மற்றும் பால்வள இணை அமைச்சர்; தகவல் மற்றும் ஒலிபரப்பு இணை அமைச்சர்** பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள், ஏற்கனவே உள்ள மத்திய அரசின் 30 துறைகளைத் தவிர, புதிதாக **கூட்டுறவுத் துறை** எனும் புதிய அமைச்சரவையை துவக்கியுள்ளார். இத்துறைக்கு, உள்துறை அமைச்சர் திரு. **அமித் ஷா** அவர்களுக்கு கூடுதல் பொறுப்பாக அளிக்கப்பட்டுள்ளது.





Available in :
15kg Tin, 1 Ltr,
1/2 Ltr, 200ml,
100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்




Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in
http://www.laabhmart.org/rajalakshmioilmill

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|

## SCC LIFE MEMBERS BIRTHDAY GREETINGS - AUGUST MONTH GREETINGS

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/L-M/146 | M/S. BABULAL MODERN RICE MILL | Mr. N.M. VENKATACHALAPATHY | 9443832473 | 01.08.1953 |
| SCC/L-M/395 | M/S. SURIYA GRAPHIC | Mr. A.B. SURESH | 9843634202 | 01.08.1967 |
| SCC/L-M/014 | M/s.KEESTU GANAM | Mr. ALLUN THULASI RAM | 9500338866 | 02.08.1963 |
| SCC/L-M/131 | M/S. K.L. GOPAL | Mr. K.G. DEVADOSS | 9842173059 | 03.08.1957 |
| SCC/L-M/493 | | Mr. S.T. VENKATESH | 9842381236 | 04.08.1964 |
| SCC/L-M/275 | M/S. SREE MEENAKSHI DYEING Co., | Mr. P.K. NANDHLAL | 9362949844 | 06.08.1968 |
| SCC/L-M/231 | M/s.VISHNURAM TRADERS | Mr.M.K.R.RAMKUMAR | 9443726267 | 07.08.1964 |
| SCC/L-M/018 | M/s.VIGNESH GRAPHICS | Mr. T.R.MOHAN RAM | 9344101432 | 09.08.1964 |
| SCC/L-M/290 | M/S. SRI ANNAI CATERING CENTRE | Mr. T.R. KRISHNAMOORTHY | 9345796109 | 10.08.1948 |
| SCC/L-M/323 | M/S. VIVEKANANDA HEALTH CENTRE | Dr. E.S.M. SARAVANAN | 9443042228 | 10.08.1971 |
| SCC/L-M/209 | | Dr. N.M.S. PRABBAKAR | 9944253737 | 11.08.1951 |
| SCC/L-M/126 | M/s. NEW SARASWATHI FINE ARTS | Mr. K.S. RAMESH KUMAR | 9345756207 | 12.08.1960 |
| SCC/L-M/429 | M/s.TICK SOFT | Mr. B.S.JANAARTHANAN | 9790575650 | 13.08.1971 |
| SCC/L-M/363 | M/S. VISHNU PROMOTERS | Mr. R.R. SUBASH | 9842752825 | 15.08.1970 |
| SCC/L-M/157 | M/S. KANCHANA MARKETING | Mr. S.L. NAGANATH | 9443832084 | 16.08.1967 |
| SCC/L-M/591 | M/S. LILAVATHI TRADERS | Mr. G.R. NARASHIMAN | 9842076380 | 17.08.1972 |
| SCC/L-M/452 | M/S. MAI INSURANCE | Mr. PRAVEEN THOPPAY P. | 8144480444 | 17.08.1978 |
| SCC/L-M/600 | M/S. MATHI AGENCY | Mr. C.G. SUDARSAN | 9150321133 | 19.08.1976 |
| SCC/L-M/375 | M/s, MUTHU PRINTERS | Mr.R.M.KRISHNAN | 9865721551 | 20.08.1959 |
| SCC/L-M/374 | M/S. SRI KARPAGA VINAYAGAR SCREEN PRINTING | Mr. M.S. SARAVANAN | 9443326438 | 21.08.1975 |
| SCC/L-M/457 | M/s.Satheesh Traders,Plot 4130TNHB | Mr.B.S.SATHEESH-Proprietor | 9443811268 | 22.08.1973 |
| SCC/L-M/553 | M/S. ANJJANAA RESTAURENT | Mr. O.B.D. BHARATH | 9344484990 | 23.08.1957 |
| SCC/L-M/345 | M/S. WELCOME VIDEOS | Mr. K.K. SURESH KUMAR | 9150643242 | 23.08.1965 |
| SCC/L-M/539 | M/S. DISC ASSETS LEAD INDIA LTD. | Mr. J.K. BASKAR | 9600914566 | 23.08.1971 |
| SCC/L-M/047 | M/s. Shrivikassh | Mrs. K.B.UMA | 9363029307 | 24.08.1970 |
| SCC/L-M/097 | M/s. V.R. CHEMICALS | Mr.R.R. PRAKASH BABU | 9940141717 | 25.08.1954 |
| SCC/L-M/039 | M/s. AMARNATH COLOR TRADERS | Mr. T.R.RAGUNATH | 9842134682 | 26.08.1958 |
| SCC/L-M/023 | Chartered Engineer & Govt. Registered Valuer | Mr. S.S.RAMAKANTHAN | 9842131272 | 28.08.1956 |
| SCC/L-M/295 | M/S. SARA'S CHEMICAL WORKS | Mr. N.S.G. SARAVANA PRABHU | 9381063450 | 29.08.1951 |
| SCC/L-M/502 | M/S. SUGANTHA GANESH BATHI COMPANY | Mr. T.S. SURENDRAN | 9842147376 | 29.08.1954 |
| SCC/L-M/158 | V-TWO ASSOCIATES | M.K.KARTHIKEYAN | 9894863112 | 30.08.1983 |
| SCC/L-M/169 | M/S. SRI GURU PLASTIC | Mr. G.R. SHIVAKUMAR | 9344102490 | 31.08.1968 |
| SCC/L-M/538 | M/s.ADOMAC | Mr.K.A.PYARILAL-Proprietor | 9940217417 | 31.08.1970 |

## SCC ANNUAL MEMBERS BIRTHDAY GREETINGS - AUGUST MONTH GREETINGS

| Member No. | COMPANY NAME | NAME OF THE PERSON | CONTACT NO. | D.O.B |
|---|---|---|---|---|
| SCC/O-M/134 | M/s,VASU TRADING COMPANY | Mr.S.V.ASHOK | 9443095559 | 03.08.1965 |
| SCC/O-M/1128 | | Mr. B.R. MOHANLAL | 9894966591 | 03.08.1946 |
| SCC/O-M/640 | M/S. N.K.M.S. GANESA IYER CO. | Mr. N.S.G. KUMARESAN | 9787522195 | 05.08.1955 |
| SCC/O-M/346 | M/S. ASHWIN CHEMICAL | Mr. R.K. SURESH | 9894145335 | 07.08.1957 |
| SCC/O-M/451 | M/S. VERSATILE INFO | Mr. K.C. PREM KUMAR | 9843506000 | 07.08.1978 |
| SCC/O-M/757 | | Mr. K.S. SUDHARSAN | 8428402183 | 08.08.1952 |
| SCC/O-M/946 | M/S. KAARTHIK ADS | Mr. N.K. KARTHIK | 9003657846 | 09.08.1984 |
| SCC/O-M/421 | M/S. SAVANI SCREEN | Mr. B.R. SEKAR | 9843126729 | 10.08.1964 |
| SCC/O-M/1123 | M/S. VIDHUSHI MOBILES | Mr. A.R. MADHAN RAO | 9150652001 | 13.08.1980 |
| SCC/O-M/958 | M/S. PATHANJALI STORES | Mr. N.N. SIVAKUMAR | 9894993576 | 13.08.1984 |
| SCC/O-M/1021 | M/S. S.M. SCREEN | Mr. A.G. SENTHIL KUMAR | 9894105839 | 14.08.1979 |
| SCC/O-M/625 | | Mr. R.N. VIJAYARAGHAVACHARY | 9842105900 | 15.08.1948 |
| SCC/O-M/933 | M/S. SIVAPRIYA DIGITAL PHOTO & VIDEO - | Mr. SATHISHKUMAR P.C. | 9698385797 | 15.08.1976 |
| SCC/O-M/977 | M/S. AISHWARYAM GRAPHICS | Mr. K.K. SARAVANAN | 9952477984 | 16.08.1980 |
| SCC/O-M/540 | | Mr. K.S. RAGHUNATH | 9944936647 | 17.08.1966 |
| SCC/O-M/1046 | M/S. SUPERB COLLECTIONS | Mr. K.R. SUBASH | 9865323244 | 18.08.1970 |
| SCC/O-M/693 | M/S. PADMA TRADERS | Mr. S.J. KANNAN | 9443203365 | 18.08.1971 |
| SCC/O-M/550 | | Mr. L.N.S KARTHIK SRINIVASAN | 9843116810 | 21.08.1971 |
| SCC/O-M/1091 | M/S. PREETHI PACKAGING | Mr. P.R. SIVAKUMAR | 9443795987 | 23.08.1973 |
| SCC/O-M/997 | M/S. SUGUMAR FABRICS | Mr. N.S.S. SUBRAMANIAN | 9488261837 | 24.08.1964 |
| SCC/O-M/986 | M/S. SRI SARAVANA ELECTRICALS | Mr. M.G. PREMKUMAR | 9842787016 | 24.08.1971 |
| SCC/O-M/988 | M/S. HIQUE POWER CONTROL PRODUCTS - | Mr. M.R. KUMARESH LAL | 9842118018 | 30.08.1962 |

பிறந்த நாள் காணும் சேம்பர் உறுப்பினர்கள் அனைவருக்கும் சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

# தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை கட்டாயம்

தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரையை இந்திய தர நிர்ணய அலுவலகம் கட்டாயமாக்கியுள்ளது. இந்திய தர நிர்ணய அலுவலகம் (BIS) பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியது. அதில் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை கட்டாயம் என்ற நடைமுறை ஜுன் 16ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய தர நிர்ணய அலுவலகத்தின் தலைமை இயக்குனர் திரு. பிரமோத் குமார் கூறுகையில், முதல்கட்டமாக ஹால்மார்க் மதிப்பீடு மையங்கள் உள்ள நாட்டின் 256 மாவட்டங்களில், தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு ரூ. 40 லட்சம் வரை விற்று முதல் உள்ள நகை வியாபாரிகளுக்கு ஹால்மார்க் கட்டாயம் என்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படும். மத்திய அரசின் வர்த்தக கொள்கைப்படி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் நகைகளும், சர்வதேச கண்காட்சிக்கான நகைகளும், அரசு அனுமதித்த பி2பி உள்நாட்டு கண்காட்சிகளுக்கான நகைகளும் கட்டாய ஹால்மார்க்கிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கடிகாரங்கள், பேனாக்கள் மற்றும் சிறப்பு வகை நகைகளுக்கும் ஹால்மார்க் முத்திரையிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றார். ஹால்மார்க் முத்திரைக்கு நகை வியாபாரிகள் ஒரு முறை பதிவு செய்யலாம். இதற்கு கட்டணம் இல்லை.

தங்கநகை விற்பனையில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், மொத்த வியாபாரிகள், விநியோகஸ்தர்கள், சில்லரை வியாபாரிகள் கட்டாயம் இந்திய தர நிர்ணய அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

நகை வியாபாரிகளுக்காக, நகை தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், விற்பனையில் நேரடி தொடர்பில்லாத கலைஞர்களுக்கு இந்த பதிவில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

தயாரிப்பாளர், மொத்த விற்பனையாளர், விநியோகிப்பாளர் அல்லது சில்லரை விற்பனையாளர் யாராக இருந்தாலும், முதல்நிலை விற்பனையில் ஹால்மார்க் முத்திரை இருக்க வேண்டும்.

ஹால்மார்க் நகையில் 2 கிராம் வரை அதிகரிப்பது அல்லது குறைப்பதற்கு அனுமதிக்கப்படும். இதில் சுத்தத்துக்கான பொறுப்பு நகைக்கடைக்காரரிடம் உள்ளது. ஹால்மார்க் முத்திரைக்கான தங்கத்தின் சுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என நகைக்கடைக்காரர்களிடம் எப்போதும் அதிக கோரிக்கை உள்ளது. இதை கருத்தில் கொண்டு, ஹால்மார்க் முத்திரைக்கு 20, 23 மற்றும் 24 கேரட் அனுமதிக்கப்படும்.

ஹால்மார்க் முத்திரையில்லாத வீட்டில் உள்ள நகைகளை நகைக்கடைக்காரர்களிடம் விற்க முடியும். வாடிக்கையாளர்களிடமிருந்து ஹால்மார்க் முத்திரையில்லாத தங்கத்தை நகைக்கடைக்காரர்கள் தொடர்ந்து பெற முடியும். நகைக் கடைக்காரர்களால் சாத்தியம் என்றால், பழைய நகைகளுக்கும் ஹால் மார்க் முத்திரை பெற முடியும். அவற்றை உருக்கி புதிய நகை தயாரிக்கும்போது, ஹால்மார்க் முத்திரை பெறலாம்.

இந்த திட்டத்தை அமல்படுத்தும்போது, எழும் பிரச்சினைகள் குறித்து ஆராய பல தரப்பு பிரதிநிதிகள், வருவாய் அதிகாரிகள் மற்றும் சட்ட நிபுணர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும்.

இந்திய தர நிர்ணய அலுவலகத்தின் ஹால்மார்க் திட்டத்தின் கீழ், ஹால்மார்க் நகைகளை விற்க நகைக்கடைக்காரர்கள் பதிவு செய்யப்படுகின்றனர் மற்றும் ஹால்மார்க் மையங்களில் பரிசோதனை மூலம் அங்கீகரிக்கப்படுகின்றன.

பிஸ்(ஹால்மார்க்) ஒழுங்குமுறைகள் 2018 ஜுன் 14ம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டன. இந்த ஹால்மார்க் முத்திரை மூலம், நுகர்வோர் தங்கம் வாங்கும்போது சரியான தேர்வு செய்து, தேவையற்ற குழப்பங்களில் இருந்து விடுபடலாம்.

இவ்வாறு சென்னையில் உள்ள இந்திய தர நிர்ணய அலுவலகம் (பிஸ்) துணை இயக்குனர் (மார்க்கெட்டிங் & சிஐ) திரு. எச். அஜய் கண்ணா விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- PIB News dtd. 17.06.2021


Sowndarya Traders

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733




WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.






DigiLocker
Your documents anytime, anywhere

# உங்கள் முக்கிய ஆவணங்கள் தொலைந்து விடாமல் இருக்க டிஜிட்டல் லாக்கர்-ஐ பயன்படுத்துங்கள்

இன்றைய காலகட்டத்தில், ஆதார், பான்(PAN), பாஸ்போர்ட் மற்றும் ஓட்டுநர் உரிமம் போன்ற முக்கியமான ஆவணங்கள் தேவைப்படாத இடங்களே இல்லை. இந்த ஆவணங்கள் இல்லாமல், நீங்கள் வங்கி வேலை முதல் வீட்டு வேலை வரை எதுவும் செய்ய முடியாது.

அத்தகைய சூழ்நிலையில், இந்த ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது நம் அனைவருக்கும் மிகவும் அவசியம். டிஜிட்டல் லாக்கர் அல்லது டிஜி லாக்கர் (Digi Locker) என்பது ஒரு வகையான மெய்நிகர் லாக்கர் ஆகும். இது பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் ஜூலை 2015ல் தொடங்கப்பட்டது.

இதில், உங்கள் ஆவணங்களை ஸ்கேன் செய்யப்பட்ட நகலை PDF, JPEG அல்லது PNG வடிவத்தில் இந்த தளத்தில் பதிவேற்றுவதன் மூலம் சேமிக்கலாம். இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் இந்த ஆவணங்களில், நீங்கள் டிஜிட்டல் கையொப்பம் இடலாம்.

டிஜி லாக்கரில் வைத்தால், உங்கள் பான்(PAN) மற்றும் ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசன்ஸ் போன்ற ஆவணங்கள் காகித வடிவில், அட்டை வடிவில் வைத்திருக்கும் போது தொலைந்து போகும் வாய்ப்பு உள்ளது. இதில், தொலைந்து விடுமோ! என்ற கவலையே தேவையில்லை. அரசின் டிஜி லாக்கரில் பத்திரமாக சேமித்து வைக்கலாம்.

### Digi Locker - டிஜி லாக்கரை உபயோகிப்பது எப்படி?:-

- இதற்காக நீங்கள் முதலில் டிஜி லாக்கரின் வலைத்தளத்திற்கு https://digilocker.gov.in/ செல்ல வேண்டும். பின்னர் உங்கள் ஸ்மார்ட்போனில் டிஜி லாக்கர் (Digi Locker) செயலியை பதிவிறக்கவும்.
- இப்போது உங்கள் ஆதார் அட்டை அல்லது மொபைல் எண்ணை பயன்படுத்தி உங்களுக்கான கணக்கை, அதாவது ஐடி-யை உருவாக்க வேண்டும். இப்போது உங்கள் எண்ணுக்கு ஒரு OTP அனுப்பப்படும்.
- செயலியை ஓபன் செய்த பிறகு, Get Started என்ற ஆப்ஷனை நீங்கள் காண்பீர்கள். அதை க்ளிக் செய்யவும்.
- பின்னர் Create Account என்பதை க்ளிக் செய்யவும். இதற்குப் பிறகு உங்கள் பெயர், பிறந்த தேதி, மொபைல் எண், செக்யூரிட்டி பின், இ-மெயில் ஐடி மற்றும் ஆதார் எண்ணை உள்ளிடுமாறு கேட்கப்படும்.
- இவற்றை செய்த பிறகு, உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணில் OTP வரும். செயலியில் இந்த OTP-ஐ சமர்ப்பிக்கவும்.
- பின்னர் உங்கள் கணக்கை திறக்க ஒரு பயனர் பெயரை உருவாக்குமாறு கேட்கப்படும். இங்கே நீங்கள் விரும்பும் ஒரு பயனர்பெயரையும் உருவாக்கலாம். பின்னர் கீழே OK என்பதை க்ளிக் செய்யவும். உங்கள் கணக்கு தொடங்கப்பட்டுவிடும்.
- இப்போது டிஜி லாக்கரின் இண்டர்பேஸ் உங்களுக்கு முன்னால் தோன்றும், நீங்கள் இங்கே சேமிக்க விரும்பும் எந்த ஆவணத்தின் மீது க்ளிக் செய்யவும்.
- இதற்குப் பிறகு ஒரு பாப்-அப் திரை உங்கள் முன் தோன்றும், அதில் உங்களிடம் அனுமதி கேட்கப்படும். அதில் OK என்பதை க்ளிக் செய்யவும்.
- சரி பிறகு, உங்களுக்கு மீண்டும் OTP எண் அனுப்பப்படும், அதை உள்ளிடவும். Continue என்பதை க்ளிக் செய்யவும்.
- இதன் பின்னர் ஆதார் அட்டையை சேமிக்க பதிவேற்றிய பிறகு உங்கள் ஆதார் அட்டை சேமிக்கப்பட்டுள்ளதை நீங்கள் காண முடியும்.
- அதே போன்று, உங்கள் பான் கார்டு, எல்.ஐ.சி, ஓட்டுநர் உரிமம், பள்ளி சான்றிதழ்கள் போன்றவற்றை இங்கே சேமிக்க முடியும்.
- இந்த ஆவணங்களையும் நீங்கள் பகிர முடியும். இவற்றை PDF வடிவத்தில் நீங்கள் அனுப்பலாம்.

– ஜீ ஹிந்துஸ்தான் (த)

## ஒரு ஆதார் மூலம் எத்தனை சிம் கார்டு வாங்கலாம்?




இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) விதிகளின்படி ஒரு ஆதார் அட்டை மூலம் 18 முறை சிம் கார்டுகளை வாங்கலாம் என கூறப்படுகிறது. முன்னதாக, TRAI-ன் விதிகளின்படி, ஒரு ஆதார் அட்டை மூலம் ஒன்பது சிம் கார்டுகளை வாங்கலாம் என இருந்தது. ஆனால் பின்னர் அதன் வரம்பு இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டது. அதாவது, இப்போது 18 சிம் கார்டுகளை வாங்கலாம்.

வணிக தேவை அல்லது மக்களின் பிற தேவைகளை கருத்தில் கொண்டு இந்த வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் உங்கள் ஆதார் எண்ணுடன் எத்தனை மொபைல் எண்கள் இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.



# A/C
# மின்சார கட்டணம் ஷாக் அடிக்காமல் இருக்க...
### சில டிப்ஸ்

ஏர் கண்டிஷனர் (A/C) பயன்பாடு மிகவும் அதிகரித்துள்ளது. A/C பகல் மற்றும் இரவு பல மணி நேரம் தொடர்ந்து இயங்குவதால், பில் அதிகமாவதை தடுக்க சில வழிகளை காண்போம்.

பலர் தங்கள் அரை ஜில்லென்று இருக்க வேண்டும் என ஏ.சி.-யை 18°C அல்லது அதற்கு குறைவான தட்ப நிலையில் அமைக்கும் பழக்கம் நம்மில் பலருக்கு உண்டு. இதனால் ஏ.சி சூடாவதோடு பழுதடையும் அபாயமும் அதிகரிக்கிறது.

ஆனால், **ஏர் கண்டிஷனரின் சரசாரி வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸ்** ஆகும். இந்த வெப்பநிலை மனித உடலுக்கு சரியான அளவு என நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஏர் கண்டிஷனரில் உயர்த்தப்படும் ஒவ்வொரு டிகிரி வெப்பநிலையும் சுமார் 6 சதவீத மின்சாரத்தை மிச்சப்படுத்துகிறது. மின்சார கட்டணத்தை குறைக்க, ஏர் கண்டிஷனரின் சராசரி வெப்பநிலையை 18°C பதிலாக 24°C ஆக வைத்திருங்கள்.

ஏசி அல்லது எலக்ட்ரானிக் கருவிகளை வாங்கும் போது, அதற்கு எத்தனை ஸ்டார்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதன் மீது சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று நிபுனர்கள் கூறுகிறார்கள். அதிக மதிப்பீடு அதாவது அதிக ஸ்டார்கள் உள்ள சாதனத்தை இயக்க குறைந்த அளவு மின்சாரமே தேவை.

5 நட்சத்திர மதிப்பீடு கொண்ட ஏர் கண்டிஷனர் உங்கள் அறையை திறம்பட குளிர்விக்கும் அதே நேரத்தில் மின் நுகர்வும் குறைவாக இருக்கும். அதோடு, உங்கள் ஏர் கண்டிஷனரில் டைமர் வசதி இருந்தால், அதனை சரியாக பயன்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். டைமர் உதவியுடன் ஏர் கண்டிஷனரை இயக்க / அணைக்க செட் செய்யலாம். இந்த அம்சத்தின் உதவியுடன், சில மணி நேரங்களுக்கு பிறகு தானாகவே ஏர் கண்டிஷனரை இயக்கவோ அல்லது அணைக்கவோ செய்வதால், சாதாரண முறையிலான பயன்பாட்டுடன் ஒப்பிடும்போது மின்சாரத்தை சேமிக்கிறது.

ஏ.சி.-யில் இருந்து மின்சார நுகர்வு குறைக்க நீங்கள் அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடுவதோடு நிற்காமல், அதை திரைச்சீலைகள் மூலம் மூட வேண்டும். இதைச் செய்வதன் மூலம், அறையின் குளிர்ச்சி பராமரிக்கப்படும். மேலும் ஏர் கண்டிஷனரும் அறையை வேகமாகவும் திறமையாகவும் குளிர்விக்கும். மேலும், ஏசி சாதனத்திற்கு தேவையற்ற சுமை இருக்காது.

ஸ்மார்ட் ஏர் கண்டிஷனர் குளிர்ச்சிக்கும் காற்று ஓட்டத்திற்கும் இடையில் சரியான சமநிலையை பராமரிக்கிறது. ஸ்மார்ட் ஏர் கண்டிஷனர் அறைக்குள் உள்ளவர்களின் இயக்கத்தை கண்காணிக்கிறது மற்றும் தானாகவே அதற்கேற்ப செட்டிங்குகளை மாற்றுகிறது. இந்த ஸ்மார்ட் ஏர் கண்டிஷனர்கள் மின் நுகர்வுகளையும் குறைக்கின்றன.

– ஜீ ஹிந்துஸ்தான் (த)

## உத்யோக் ஆதார் திட்டம் கால அவகாசம் நீட்டிப்பு


உத்யோக் ஆதார் பத்திர திட்டத்தின் செல்லுபடி காலத்தை 2021 மார்ச் 31-ல் இருந்து 2021 டிசம்பர் 31 வரை சிறு, குறு மற்றம் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் நீட்டித்துள்ளது. சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான முன்னுரிமை துறை கடன் வசதிகள் உள்ளிட்ட தற்போதுள்ள அனைத்து திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகைகளின் பலன்களை EM பகுதி-2 மற்றும் உத்யோக் ஆதார் பத்திரதாரர்கள் இதன் மூலம் பெற முடியும். விருப்பமுள்ள நிறுவனங்கள் https://udyamregistration.gov.in எனும் தளத்தில் இலவசமாக எந்த ஆவணங்களும் இல்லாமல் பதிவு செய்து கொள்ளலாம்.

## வரி செலுத்தியவர்களுக்கு கௌரவம்

ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, வரி செலுத்தியவர்களை கௌரவிக்க மத்திய மறைமுக வரி வாரியம் முடிவு செய்துள்ளது. ஜிஎஸ்டி வரி செலுத்தியதில் கணிசமாக பங்களிப்பு அளித்தவர்கள் மற்றும் சரியன நேரத்தில் ஜிஎஸ்.டி தாக்கல் செய்தவர்களை அடையாளம் காண தரவு பகுப்பாய்வு ஒன்றை மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் நடத்தியது. இதன்படி 54,439 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 88 சதவீதம் பேர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலில் ஈடுபடுபவர்கள். தமிழகத்தில் 5,589 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


SRIS TEXTURE
ONLY TEXTURE SINCE 2009
Cell: 97891 08600
SRIS INTERIOR
* INTERIOR * WALL TEXTURE
* CONSTRUCTION CHEMICAL
No: 72, Devangar High School Road,
Coimbatore - 641 002
ID: srisinterior@rediffmail.com


# பொருளின் மதிப்பு கூட்டுதலால் வரும் தொழில் மாற்றம்




பொருளின் மதிப்பு கூட்டுதல் என்பது ஒரு பொருளை மேம்படுத்தி அதன் மதிப்பை கூட்டி சின்ன சின்ன மாறுதல் செய்து, மக்களுக்கு பல்வேறு வகையில் பயன்படும் விதமாக மாற்றுப் பொருளாக உருவாக்குவதே மதிப்புக் கூட்டுப் பொருள் என்று அழைக்கப்படுகிறது.

புதிய ஸ்டார்ட்அப் தொழில் முனைவோர்கள் ஒரு பொருளை அப்படியே விற்பனை செய்வதைக்காட்டிலும் மதிப்புக் கூட்டி விற்பது நல்ல லாபத்தைத் தரும். மதிப்புக் கூட்டு தொழில்நுட்பம் கற்றுக் கொண்டால் தொழில் முனைவோர்கள் ஏற்றுமதி தொழிலில் வெற்றி பெறலாம்.

உதாரணத்திற்கு, தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களை பல்வேறு விதமான மதிப்புக் கூட்டி பொருளை செய்யலாம்.

தேங்காய் மட்டையை பதப்படுத்தி அதை 'பித்' என்கிற வடிவில் கொண்டு வருகிறபோது அந்த பொருளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் தேங்காய் மட்டையில் உள்ள நாரைப் பிரித்தெடுத்து அதை விவசாயத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான நார்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்கிறது. மண் தொட்டியில் தேங்காய் நாரை வைத்து, பத்து லிட்டர் தண்ணீர்வரை ஊற்றினாலும் அப்படியே உறிஞ்சி தக்க வைத்துக் கொள்ளவதால் அதற்கு வரவேற்பு பலமாக உள்ளது. அந்த நாரில் பயிரை வைத்து வளர்க்கிறார்கள்.

தேங்காய் கொட்டாங்குச்சிகளை வெளிநாடுகளில் பல முறை பயன்படுத்தும் Eco-Friendly கப்புகளாக பயன்படுத்துவதால் ஏற்றுமதி செய்யலாம்.

அதோடு, பாலிலிருந்து பல நாட்கள் கெடாமல் இருக்கும் சீஸ் என்கிற பாலாடைக் கட்டி, பன்னீர், பால் பவுடர், கிரீம் தயாரிக்கலாம். சீஸ் தயாரிக்க பெரிய தொழிற்சாலை தான் தேவை என்றில்லை, சிறிய அளவில் வீட்டிலேயே உற்பத்தி செய்யலாம். இது எவ்வளவு நாட்கள் என்றாலும் கெட்டுப் போகாது.

நெல்லிக்காயில் இருந்து ஜுஸ், நெல்லி ஊறுகாய், நெல்லி சிப்ஸ், தொக்கு, நெல்லிப் பாக்கு சீவல், என பல மதிப்பு கூட்டு பொருட்களை தயாரிக்க முடியும். இதே போன்று மஞ்சள், மிளகாய், தக்காளி, மாம்பழம், எலுமிச்சை மற்றும் மீன், கோழி மற்றும் ஆட்டு இறைச்சி மூலம் பல மதிப்பு கூட்டு பொருட்களை உருவாக்கலாம்.

மதிப்பு கூட்டு பொருட்களினால் ஸ்டார்ட் அப் தொழில் முனைவோர்கள் தொழிலில் வெற்றி அடைய நிறுவனத்தின் பெயர் (பிராண்டிங்) பொருளை பேக் செய்யும் முறை மற்றும் அதை சரியான வழியில் சந்தைப்படுத்துதல் போன்றவை மிகவும் முக்கியம் ஆகும்.

மதிப்புக்கூட்டல் என்கிற மகத்தான தொழில் வடிவத்தை கற்றுக்கொள்வதே இன்றைய தொழில் முனைவோர்கள் குறுகிய காலத்தில் வெற்றி அடைய சாத்தியம் ஆகிறது.

**- Startup and Business News**




வெளியில் செல்பவர்கள்
**N95 மாஸ்க்**-ஐ பயன்படுத்துங்கள்

வீட்டில் இருப்பவர்கள்
**டிரிப்பில் லேயர் மாஸ்க்**-ஐ
பயன்படுத்தங்கள்




ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



**Cell: 90805 54802, 99424 90217**

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

**MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE**

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

## விரைவில் சந்தைக்கு வருகிறது சுற்றுச்சூழலுக்கு ஏற்ற கிருமிநாசினி

- PIB News dtd. 17.06.21

கொவிட் தொற்று காலத்தில் மக்கள் அடிக்கடி கிருமிநாசினி மூலம் கைகளை சுத்தம் செய்கின்றனர். இதனால் கைகளில் வறட்சி ஏற்படுகிறது. இப்பிரச்னைக்கு தீர்வு காண புனேவைச் சேர்ந்த தொடக்க நிறுவனம் 'வீ இன்னொவேட் பையோ சொல்யூசன்ஸ்', வெள்ளி நானோ துகள்கள் மூலம் கிருமி நாசினியை தயாரித்துள்ளது.

ஆல்கஹால் இல்லாத, கைகளில் வறட்சியை ஏற்படுத்தாத, நச்சுத்தன்மையற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற இதமான இந்த கிருமிநாசினி சந்தைகளில் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

இந்த வெள்ளி நானோ துகள்கள், வெள்ளி அயனிகளை மெதுவாக மற்றும் நீண்ட நேரம் விடுவித்து நுண்ணுயிரிகளை கொல்கிறது. அதனால் இந்த கிருமிநாசினியை அடிக்கடி பயன்படுத்த தேவையில்லை. இவற்றை சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நிலையில் சேமித்து வைக்க முடியும். இந்த கிருமிநாசினி, பரிசோதனைகளை முடித்து, மத்திய மருந்து தர கட்டுப்பாடு அமைப்பின் ஒப்புதலை பெற்றுள்ளது.

இந்த 'வீ இன்னோவேட் பையோ சொல்யூசன்ஸ்' நிறுவனத்துக்கு தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முனைவு வளர்ச்சி வாரியத்தின் (NSTEDB) கவச் (CAWACH 2020) திட்டத்தின் கீழ் மானிய உதவி அளிக்கப்படுகிறது.

### மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 72, கடந்த 2 வருடங்களாக தோள்பட்டையை உயர்த்த முடியவில்லை. வலி தீராது இருக்கின்றது. தோள் மூட்டு சிகிச்சை நிபுணரிடம் பரிசோதித்து X-ray, MRI எடுத்ததில் என் தோள் மூட்டினில் உள்ள சுற்றுப்பட்டை தசை கிழிந்து மூட்டு தேய்மானம் அடைந்து உள்ளது என்றும், அதற்கு Reverse Shoulder Replacement செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த சிகிச்சையை மேற்கொண்டால் வலி நீங்கி மூட்டின் அசைவு வருமா?

**பதில்:** தோள் மூட்டின் சுற்றுப்பட்டை தசை கிழிந்து மூட்டு தேய்மானம் அடைந்தால் அதை Rotator Cuff Arthropathy என்று கூறப்படுகிறது. இதற்கு நவீன மருத்துவத்தில் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட சிகிச்சை Reverse Shoulder Replacement ஆகும். இந்த சிகிச்சை தேய்மானம் அடைந்த மூட்டினை அகற்றி பந்து கிண்ணம் மூட்டான தோள் மூட்டினில் Reverse Shoulder மூட்டு பொருத்தப்படுகிறது. Deltoid என்னும் தசையின் இறுக்கத்தை சீரமைத்து இயங்க செய்வதால் மூட்டின் அசைவு நன்றாக இருக்கும். தாராளமாக இந்த சிகிச்சையை மேற்கொண்டு பயனடையுங்கள்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,

வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436

## கொரோனா தடுப்பூசி மலட்டுத்தன்மையை ஏற்படுத்தாது

கொரோனா தடுப்பூசி மலட்டுத்தன்மையை ஏற்படுத்தாது என நோய்த்தடுப்புக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனை குழுவின் கொவிட்-19 செயற்குழு தலைவர் டாக்டர். நரேந்திர குமார் அரோரா தெரிவித்துள்ளார். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையின் ஓடிடி சேனலுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

"போலியோ தடுப்பு மருந்து இந்தியா மற்றும் உலகின் மற்ற நாடுகளில் கொடுக்கப்பட்டபோது, இந்த மருந்துகளை எடுத்து கொள்ளும் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் மலட்டுத்தன்மை ஏற்படலாம் என வதந்திகள் பரப்பப்பட்டன. இதுபோன்ற தவறான தகவலை, தடுப்பூசிக்கு எதிரான அமைப்பினர் பரப்புகின்றனர். அனைத்து தடுப்பூசிகளும், தீவிர அறிவியல் ஆராய்ச்சிக்குப் பின்தான் வெளிவருகின்றன என்பதை நாம் அறிய வேண்டும். எந்த தடுப்பூசிக்கும் இது போன்ற பக்க விளைவுகள் இல்லை. இது போன்ற பிரச்சாரம் மக்களை தவறாக வழிநடத்தும். நமது முக்கிய நோக்கம், கொரோனாவிலிருந்து நம்மையும், நமது குடும்பம் மற்றும் சமூகத்தையும் காப்பதுதான். ஆகையால் தடுப்பூசி போட அனைவரும் முன்வர வேண்டும்".

மேலும் அவர் கூறியதாவது, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'சைடஸ் காடிலா' நிறுவனத்தின் உலகின் முதல் "டிஎன்ஏ-பிளாஸ்மிட்" தடுப்பூசியை நம் விரைவில் பெறப் போகிறோம். "உயிரியல்-இ" என்ற புரத தடுப்பூசியையும் நாம் விரைவில் எதிர்பார்க்கலாம். இந்த தடுப்பூசிகளின் பரிசோதனைகள், ஊக்கம் அளிப்பதாக உள்ளன. இந்த தடுப்பூசி செப்டம்பருக்குள் கிடைக்கும் என நம்புகிறோம். இந்திய "எம்-ஆர்என்ஏ" தடுப்பூசியை 2-8 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் பாதுகாக்க முடியும். இதுவும் செப்டம்பருக்குள் கிடைக்கும்.

'சீரம் இந்தியா' நிறுவனத்தின் "நோவாவேக்ஸின்" தடுப்பூசி மற்றும் 'ஜான்சன் அண்ட் ஜான்ட்சன்' நிறுவனத்தின் தடுப்பூசியும் விரைவில் வரவுள்ளன. ஜூலை 3வது வாரத்துக்குள், 'பாரத்-பயோடெக்' மற்றும் 'சீரம் இந்தியா' நிறுவனத்தின் தடுப்பூசிகள் உற்பத்தி அதிகரிக்கப்படவுள்ளன. இது நாட்டின் தடுப்பூசி விநியோகத்தை அதிகரிக்கும்.

ஆகஸ்ட் மாதத்துக்குள், மாதம் ஒன்றுக்கு 30 முதல் 35 கோடி தடுப்பூசி டோஸ்களை கொள்முதல் செய்ய முடியும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதன்மூலம் நாள் ஒன்றுக்கு ஒரு கோடி பேருக்கு தடுப்பூசி போட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

- PIB News dtd. 25.06.21

வாங்கவந்தா பிடிக்கும்க
Life Long Tailor
லைஃப்லாங் டெய்லர்
ரெடிமேட் இல்லங்க உங்கள் அளவில் எங்கள் துணியில்
காட்டன் சர்ட் ரூ. 400/- முதல் காட்டன் பேண்ட் ரூ. 500/-முதல் மற்றும்
திருமணம், திருவிழாக்களுக்கு குரூப் சர்ட் சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கிறோம்

1-B, பச்சரிசிக்கார தோப்பு, காமராஜர் சாலை,
(தினமணி தியேட்டர் எதிர்சந்து), மதுரை-9.
81222 33001 90424 30763

# அவுட்சோர்சிங்



1980ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு உலக வர்த்தகத்தில் அவுட்சோர்சிங் பரவலாக தொடங்கியது. அப்போதிருந்த பெரிய மற்றும் சிறிய வணிக நிறுவனங்களுக்கும், பல்வேறு விதமான பொது சேவைகளுக்கும் அவுட்சோர்சிங் ஒரு முக்கிய தீர்வாகவும் விருப்பமாகவும் மாறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அவுட்சோர்சிங் என்றால் என்ன? நிறுவனங்கள் அதை ஏன் பயன்படுத்துகின்றன? அதனால் வணிகத்தில் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் என்ன? என்பதை பார்க்கலாம்.

உங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை உங்கள் நிறுவனத்திற்குள்ளிருந்து உற்பத்தி செய்வதை விட வெளியில் இருக்கும் சப்ளையர்களிடமிருந்து செய்வது / பெறுவது தான் ''அவுட்சோர்சிங்'' என்று அழைக்கப்படுகிறது.

உதாரணத்திற்கு உங்கள் அலுவலகத்தில் துப்புரவு நடவடிக்கைகளுக்கு நீங்களே ஆட்களை நியமிக்காமல், வெளிப்புற கம்பெனியின் பணியாளர்களை பயன்படுத்துவது. அதுபோல ஒரு நிறுவனத்திற்கு தேவையான கேண்டின் உணவக நடவடிக்கைகளுக்கு வெளியில் இருந்து தயாரிக்கப்பட்ட உணவுகளை நிறுவனத்தில் இருக்கும் பணியாளர்களுக்கு வழங்குவது அல்லது நிறுவனத்திற்கு உள்ளேயே இருக்கும் கேன்டீனிற்கான சமையல் கூடத்தில், நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்படாத வெளியாட்கள் மூலம் உணவு தயாரிப்பது போன்றவை அவுட்சோர்சிங்கில் அடங்கும்.

எந்த வகையான சேவைகளை அவுட்சோர்சிங் செய்யலாம்? அலுவலக கேண்டீன், ஐடி சேவை தகவல் தொழில்நுட்ப சேவை, ரயில் டிக்கெட் சேவை, கால்சென்டர், சாலை பராமரிப்பு பணியாளர்கள், மனிதவள சேவைகள், தொலைத்தொடர்வு, உற்பத்தி லாஜிஸ்டிக்ஸ் விநியோகம், கிடங்கு நிர்வாகம், மார்க்கெட்டிங் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகள்.

அவுட்சோர்சிங்கினால் நிறுவனங்கள் பெறக்கூடிய மிகப்பெரும் நன்மை “செலவு குறைவு“ தான். மிகப்பெரும் நிறுவனங்கள் சிறிய நிறுவனங்கள் மூலம் அவுட்சோர்சிங் செய்வதனால், சிறிய நிறுவனங்கள் குறைந்த சம்பளத்தில் பணியாளர்களை பெற முடியும். நிறுவனங்கள் தங்களது பணியாளர்களாக அவர்களை நியமிக்காமல் அதே வேலையை குறைந்த செலவில் சிறிய அவுட்சோர்சிங் நிறுவனங்கள் மூலம் அந்த காரியங்களை செயலாற்றிக் கொள்ள முடியும்.

குறிப்பிட்ட சேவை தேவை இல்லை என்றால் குறுகிய காலத்தில் அந்த சேவையை நிறுத்திக் கொள்வதற்கும், விலக்கிக் கொள்வதிலும் இருக்கும் நெகிழ்வுத்தன்மை, அவுட்சோர்சிங் மூலம் பொருள்களை தயாரித்து பெறுவதற்கான தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலதனம் இதன் சாதகமான அம்சங்கள்.

மேலும் சில நிறுவனங்களில், பணியாளர்களை நிறுவனப் பட்டியலில் நேரடியாக பணியமர்த்தாமல் ஒப்பந்ததாரர் மூலமாக அதாவது அவுட்சோர்சிங் வழியில் பணியமர்த்தி அவர்களுக்கு உரிய ஊதியங்களை ஒப்பந்ததாரர் மூலம் வழங்குதல் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் நிறுவனங்கள் தங்கள் செலவினங்களை குறைக்க முயல்கின்றன. அதே நேரத்தில் வேலையிலும் தரத்தில் சமரசம் செய்து கொள்ளாமல் காரியங்கள் நடைபெறுகின்றன.

குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் வாய்ந்த வல்லுனர்களை ஆலோசகர்களாக பணியமர்த்துவதும், வழக்கறிஞர்களிடம் அவுட்சோர்சிங் முறையில் சேவைகளை பெறுவதும் இப்போது அதிகரித்து வருகின்றன. சேல்ஸ் டாக்ஸ் விற்பனை வரி கணக்கிடுதல், அதற்கான படிவங்களை சரிபார்த்தல் போன்றவற்றிற்காக தனியக அக்கவுண்ட்ஸ் அல்லது பைனான்ஸ் டிபார்ட்மெண்ட்களில் ஊழியர்களை பணியமர்த்தாமல் அவுட்சோர்சிங் முறை கடைபிடிக்கப்படுகிறது. வரும் காலங்களில் அவுட்சோர்சிங் முறை வெகுவாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. கூடுமானவரை நிறுவனங்கள் தங்களது நேரடி ஊழியர் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்பாதது தான் முக்கிய காரணம்.

அவுட்சோர்சிங்கின் மூலம் பணியமர்த்தப்படும் ஊழியர்கள்


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
92445 00633
99433 79499
SRB சில்க்ஸ் பொட்டிக்
158 & 158A, தெற்கு மாசி வீதி, மதுரை – 1.
SRB Silks & Boutique
59, South Bazaar, Palayam Kottai,
Tirunelveli. Cell : 63852 13135
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.
SRB Silks & Boutique
Raja Annamalai Road, Saibaba Colony,
Coimbatore. Cell : 94869 29246

நிறுவனத்தின் இலக்குகளை முழுமையாக புரிந்து கொள்வதில் நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. நிறுவனத்தின் ஊழியர்கள் இலக்குகளை முழுமையாக பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். மேலும் அதிகப்படியாக அவுட்சோர்சிங் முறையை உபயோகப்படுத்துவது நிறுவனத்தின் கலாச்சாரத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

அவுட்சோர்சிங் முறையில் அதிகப்படியான பலன்களை பெறுவது நிறுவனங்கள் உருவாக்கும் ஒப்பந்தத்தின் தரத்தைப் பொறுத்தது. இதில் ஒப்பந்ததாரர் அவுட்சோர்சிங் வழங்குநர், குறிப்பிட்ட சேவை பிரிவில் அனுபவம், சர்வீஸ் லெவல் அக்ரிமெண்ட் என்னும் சேவை நிலை ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலம் நிறுவனம் எதிர்பார்க்கும் சேவையின் தரம், அவுட்சோர்சிங் வழங்குநர் தரக்கூடிய சேவையின் தரம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அவுட்சோர்சிங் முறையின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது. மேலும் நிறுவனத்தின் தொழில்நுட்ப ரகசியங்கள், வியாபார சூட்சமங்கள் சமயங்களில் வெளியாருக்கு கசியும் வாய்ப்புகள் உள்ளன.

அவுட்சோர்சிங் பங்குதாரர் பயன்படுத்தும் வழிமுறைகளை பற்றி நிறுவனங்கள் அறிந்து இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவருடைய செயல்பாடுகளுக்கு நிறுவனம் முழுவதும் பொறுப்பில்லை என்றாலும் அவர்களுடன் தொடர்பில் இருப்பதால் எந்த ஒரு எதிர்மாறையான வணிக நடைமுறைகளும் நிறுவனத்திற்கு கெட்ட பெயரை உருவாக்க வழிவகுக்கும். கரணம் தப்பினால் மரணம் என்னும் அளவிற்கு இதில் ஏதேனும் குளறுபடிகள் நேர்ந்தால் நிறுவனங்கள் செயல்பாட்டிலும், சட்டப்பூர்வமாகவும் சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

**பிரபலமான அவுட்சோர்சிங் முறைகள்:**

1. BPO: Process Outsourcing
   – வணிக செயல்பாடு
2. KPO: Knowledge Process Outsourcing
   – அறிவுசார் செயல்பாடு
3. EPO: Engineering Process Outsourcing
   – பொறியியல் செயல்பாடு
4. ITO: Information Technology Outsourcing
   – தகவல் தொழில்நுட்பம்
5. DPO: Data Process Outsourcing
   – தரவு செயல்பாடு
6. LPO: Legal Process Outsourcing
   – சட்ட செயல்பாடு
7. RPO: Recruitment Process Outsourcing
   – பணியமர்த்தல் செயல்பாடு

**- Startup and Business News**



# ட்ரோன் மூலம் உணவு டெலிவரி

டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்று தொழில் நிறவனங்கள் பல பரிமாணமம் அடைந்து வருகிறது. குறிப்பாக ஆளில்லா / காகிதமில்லா பணிகளுக்கு மாற்றாக டிஜிட்டல் தொழில்நுட்பம் புகுத்தப்படுகிறது. ஒவ்வொரு தொழில் நிறுவனங்கள் தங்கள் தகுதிக்கேற்ப டிஜிட்டல் முறையை புகுத்தி வருகின்றனர்.

அதன்படி பெரிய நிறுவனம் ஒன்று தற்போது இந்தியாவில் ட்ரோன்களைப் பயன்படுத்தி உணவு டெலிவரி விரைவில் தொடங்கும் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம், உணவு டெலிவெரியில் முன்னணியில் உள்ள பெரிய நிறுவனம் ஒன்று விரைவில் உணவுகளை ட்ரோன்கள் மூலம் டெலிவரி செய்யத் தொடங்க உள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிறுவனத்தின் ட்ரோன் டெலிவரிக்கான கூட்டாளி நிறுவனம் பாதுகாப்பு அமைச்சகம், விமான இயக்குனரகம் (DGCA) மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் (MOCA) ஆகியவற்றிலிருந்து இறுதி அனுமதி பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்கான சோதனை அடுத்த சில நாட்களில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு அதிகாரப்பூர்வமாக ட்ரோன் மூலம் உணவு டெலிவரி உங்கள் வீட்டு வாசலில் தொடங்கும். அடுத்த சில வாரங்களுக்கு, இக்குழு உத்தரப்பிரதேசம் மற்றும் பஞ்சாபில் (ஈட்டா மற்றும் ரூப்நகர் மாவட்டங்கள்) உள்ளிட்ட சில பகுதிகளில் ட்ரோன் டெலிவரி சோதனைகளை நடத்த உள்ளது.

**பெரு நிறுவனத்தின் இந்த ஆளில்லா சேவையால், தற்போது உணவு டெலிவெரி செய்யும் தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.**

**- Bulletin Committee**








https://youtu.be/-JMVniVMLr0

# எலக்ட்ரிக் வாகனங்களை 'சார்ஜ்' செய்யும் மையங்கள் மூலமாக

## தொழில் முனைவோர் வாய்ப்புகள்



உலகில் வாகன உற்பத்தி, பயன்பாடு அதிகமுள்ள நாடுகளில் நம் இந்தியாவும் ஒன்றாகும். இதுவரை வாகனங்கள் பெட்ரோலிய பொருட்களினால் மட்டுமே அதிகமாக இயங்குவதால், நம் நாட்டின் மொத்த இறக்குமதியில் பெட்ரோலிய பொருட்களின் பங்கு அதிகம். இதனால் மாசுபாடும் அதிகமாகிறது.

எனவே அரசானது “பேட்டரியினால்” இயங்கும் மின் வாகனங்களை பயன்படுத்த அதிக முக்கியத்துவம் தருகிறது. இந்த மின் வாகனங்களை சார்ஜ் செய்வதற்காக உள்ள மையங்களே "Electric Vehicle Charging Stations" ஆகும். இதற்காக நம் மத்திய அரசானது "FAME India" (Faster Adoption and Manufacturing of (Hybrid) & Electric Vehicle in India) எனும் திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

இதனைப் பற்றி விரிவாக "dhi.nic.in" எனும் வலைதளம் (Website) மூலமாக அறியலாம்.

**சார்ஜ் மையங்கள் (Charging Stations) அமைப்பதற்கு அரசினால் அறிவிக்கப்பட்ட முன்னுரிமை உள்ள நகரங்கள்:** 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 10 லட்சத்திற்கு அதிகமுள்ள மக்கள் வசிக்கும் நகரங்கள், மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட அனைத்து Smart Cities, 7 பெருநகரங்கள் (Delhi, Mumbai, Kolkata, Chennai, Hyderabad, Bangalore, Ahmedabad) அனைத்து யூனியன் பிரதேசங்களிலுமுள்ள முக்கிய நகரங்கள், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைநகரங்கள்.

சார்ஜ் மையங்களானது அவற்றின் செயல் திறனைப் பொறுத்து இரு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை, Fast Charging Stations (விரைவு சார்ஜ் மையங்கள்), Slow Charging Stations (மெதுவான சார்ஜ் மையங்கள்).

சார்ஜ் மையங்களானது அவை நிறுவப்படும் இடங்களைப் பொறுத்து மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை,

Category A: வணிகப் பயன்பாட்டிற்காக பொது இடங்களில் நிறுவப்படும் சார்ஜ் மையங்கள் (உதாரணம் – இரயில்வே நிலையம், பேருந்து நிறுத்தம்).

Category B: அரசு அலுவலகங்களில் நிறுவுதல் (உதாரணம் – அனைத்து அரசு அலுவலகங்கள்).

Category C: தனியாருக்கு சொந்தமான இடங்களில் வணிக பயன்பாட்டிற்காக அல்லது வணிக பயன்பாட்டிற்கு இல்லாமலோ நிறுவுதல். (உதாரணம் – தனியார் Taxi நிலையங்கள்).

**விண்ணப்பிக்கும் முறை – அரசு நிறுவனங்கள்:** அரசு நிறுவனங்களானது நேரடியாக மத்திய அரசு துறையில் (Department of Heavy Industry (DHI)) விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தின் நகலினை சம்பந்தப்பட்ட அரசு அலுவலகம் உள்ள நகர நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தனியார்: தனியார் துறையினர் அவர்கள் வசிக்கும் நகர நிர்வாகத்திடம் விண்ணப்பத்தை அளிக்க வேண்டும். அந்த விண்ணப்பமானது நகர நிர்வாகம் மூலமாக மத்திய அரசு துறையிடம் (DHI) சமர்ப்பிக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட சார்ஜ் மையங்களானது சூரிய ஒளி ஆற்றலின் மூலமாக இயங்க இயலுமா என்பதற்கான அறிக்கையையும் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையானது "MNRE" ( Ministry of New and Renewable Energy - புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை) வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய தகவல்கள்:** சார்ஜ் செய்ய தேவைப்படும் மின்சாரத்தின் அளவு, விலை (Rate / Unit) தேவையான இட வசதி அளவு. தெளிவான தொழில் திட்ட


வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
வரம் TV
94430 34009
Google Play Store - ல் SCT app
மூலம் நேரடியாக கண்டுகளியுங்கள்...
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
Contact:
99408 25179
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

**மத்திய அரசானது நம் விண்ணப்பத்தை பரிசீலிக்கும்போது கவனத்தில் கொள்ளும் விஷயங்கள்:** குறிப்பிட்ட நகரத்தின் மக்கள் தொகை பெருக்கம், குறிப்பிட்ட நகரத்தின் வாகன எண்ணிக்கை (Total No. of 2w, 3w, 4w per 10,000 persons) பதிவு செய்யலாம் என எதிர்பார்க்கும். 3,4 சக்கர வாகனங்களின் எண்ணிக்கை (அதிகமாக வாகனங்கள் இருந்தால், மதிப்பு அதிகரிக்கும் – More the Number, More the Weight) குறிப்பிட்ட நகரில் ஏற்கனவே நிறுவப்பட்ட சார்ஜ் மையங்களின் எண்ணிக்கை.

**விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கும் முறை:** மத்திய அரசு துறையானது (DHI) விண்ணப்பங்களை தேர்வு செய்வதற்காக ஒரு தொழில் நுட்பக்குழுவினை அமைக்கும். அந்தக் குழுவில் DHI அலுவலர்கள், MNRE அலுவலர்கள், மத்திய மின்துறை அலுவலர்கள், நிதி ஆயோக் அலுவலர்கள் உறுப்பினராக இருப்பர். இந்தக் குழுவே நம் விண்ணப்பங்களை பரிசீலிக்கும். பின்னர் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பமானது விண்ணப்பித்தவரிடம் தரப்பட்டு அவருக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

முன்னணி சார்ஜ் மையம் (Charging Station) உற்பத்தியாளர்கள் இன்றைய உலகில் முன்னணி சார்ஜ் மைய (Charging Station) உற்பத்தியாளர்கள்: 1. Delta Electronics India, 2. ABB India Ltd., 3. Siemens, 4. EXHICOM.

இத்தகைய சிறப்பு வாய்ந்த எதிர்காலத்தின் கட்டாய தேவையான எலக்ட்ரிக் வாகனங்களை சார்ஜ் செய்யும் மையங்கள் (Electric Vehicles Charging Station) மூலமாக சுயதொழில் செய்து நாமும் முன்னேறுவோம்! நம் நாட்டினையும் முன்னேற்றுவோம்!!.

- Startup and Business News

# யோகா-வை அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றுவோம்!

பெங்களூரில் உள்ள மனநல மற்றும் மூளை நரம்பியல் தேசிய மையத்தின் (நிம்ஹன்ஸ்) மனநோய் மருத்துவத்துறையின் பேராசிரியர் டாக்டர் முரளிதரன் கேசவன் தலைமையிலான குழுவினரின் ஆராய்ச்சியில், **அதீத மன அழுத்த நோய்** மற்றும் **நரம்பு** உயிரியல் சம்பந்தமான பிரச்சினைகளில் **யோகா** சிகிச்சை முறையினால் **பலன்கள் அளிப்பதாக தெரிவித்துள்ளனர்**. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் யோகா மற்றும் தியானத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (சத்யம்) திட்டத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சி, தி கனடியன் ஜர்னல் ஆஃப் சைக்கியாட்ரி என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரச்சினையின் தொடக்கத்திலேயே யோகா சிகிச்சை அளிக்கப்படுவது சிறந்த பலன்களை அளிப்பதாகவும், லேசான மன அழுத்தம் பிரச்சினைகளுக்கு யோகாவை தனி சிகிச்சையாக அளிக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். மன அழுத்தப் பிரச்சினை உள்ள நோயாளிகள் விரைவில் குணமடைவதில் யோகாவின் பங்கு முக்கியமாகக் கருதப்படுவதால் நிம்ஹன்று மையத்தின் உள் மற்றும் புற நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளிகள் முறையான யோகா பயிற்சியை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**யோக அறிவியல்** குறித்த தேசிய திறந்தவெளி பள்ளிக் கல்வி நிறுவனத்தின் பட்டயப் படிப்பை சர்வதேச யோகா தினத்தின்று (ஜூன் 21) மத்திய கல்வி இணை அமைச்சர் திரு. சஞ்சய் தோத்ரே அறிமுகப்படுத்தினார்.



''யோக அறிவியல்'' குறித்து தொடங்கப்பட்டுள்ள படிப்பை பயில்பவர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை வழங்குபவர்களாக மாறுவார்கள் என்று அவர் கூறினார். இரண்டு வருட பட்டயப் படிப்பின் முதல் வருடத்தில் ஐந்து பாடங்கள் உள்ளது என்றும் யோகா கற்பித்தல் பயிற்சி குறித்து அவை கற்றுக் கொடுக்கும் என்றும் கூறினார். இரண்டாம் வருடத்தில் யோகா மருத்துவ முறை குறித்த ஐந்து பாடங்கள் கற்றுத் தரப்படும் என்றும் அவர் கூறினார்.

யோகா, உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் நமக்கு உதவுவது மட்டுமல்லாமல், சமூகத்தின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது. ஆகவே, **யோகாவை** தங்கள் **அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்று**மாறு குடியரசுத் துணைதலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். முயல்வோம்!... – இதழ் குழு


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC

No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

“ஷர்வ ரக்சன்” MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
“எண் கணித ஜோதிட“ முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



FOR APPOINTMENT
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*




## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

DASU SINCE 1993

## நியூ தாசு மெட்டல்ஸ்
## NEW DASU METALS

25 Years ANNIVERSARY

BRASS AND COPPER POOJA ARTICLES, UTENSILS, STATUES, WHITE METAL HANDICRAFTS, SS VESSELS, TROPHIES, SHIELDS AND GIFT ARTICLES.

254, KAMARAJAR SALAI (NEAR ARASAMARAM),MADURAI - 09)

0452 4368753 | New Dasu Metals | newdasumetals

www.newdasumetals.com



## Plan & Built

Civil Construction & Interior

DTCP APPROVED LAYOUT

ம.வ(ம) ந.ஊ.து.இ.எண்: 599/2018

## GOLDEN CITY

இராமு சீதா பாலிடெக்னிக் எதிரில், காரியாபட்டி.

12.5 லட்சம் முதல் தனித் தனி வீடுகள்

2.15 லட்சம் முதல் வில்லா பிளாட்டுகள்

**Contact : 8754660660, 9745520920, 9962295452**

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Office : 163-A2, First Floor, Thamgam Nagar, Ganesh Theater Signal, Kamarajar Salai, Madurai - 625 009.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.07.2021 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

info@onvgprint.com
+91 95 97 775 775
FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

onVGPrint.com
— A unit of VIGNESH GRAPHICS —

visit :
www.onvgprint.com

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

VSOC Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

வேல் மருத்துவமனை
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

Right Treatment is Everyone's Right

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard




Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm




Applications :
- Sarees
- Bed Sheets
- Furnishing
- Dress Material
- Blankets
- Made Ups
- Shirting


N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com


T.S. Saravanan

Official Publication:
SOURASHTRA CHAMBER OF COMMERCE
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org